

# அன்புக்கு இன்னொரு பெயர் அப்துர் ரஹ்மான்!

*( நிகழ்வுகளும், நீதிகளும். )*



**திருச்சி சையது**



# அன்புக்கு இன்னொரு பெயர்
# ***அப்துர் ரஹ்மான்!***

*( நிகழ்வுகளும், நீதிகளும். )*

தொகுப்பு :
***திருச்சி சையது,*** M.A., M.Phil.,

*அட்டைப்பட ஓவியம் :*
***அமுதன் பச்சைமுத்து***



***அன்புக்கு இன்னொரு பெயர்***
***அப்துர் ரஹ்மான்!***

## *முன்னுரை*

*‘**க**ல்வித்தந்தை’ பி.எஸ்.ஏ. அவர்களின் துபாய் ஈ.டி.ஏ. நிறுவனத்தில் நான் கணக்காளராக பணியாற்றியபோது, பி.எஸ்.ஏ. அவர்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் பழகும் இனிமையான வாய்ப்புகள் அமைந்தன.*

*அப்போது அவர்கள் பகிர்ந்துகொண்ட பி.எஸ்.ஏ. அவர்களின் வாழ்வில் நடந்த நிகழ்வுகளை கேட்கும்போதே அது தன்னம்பிக்கையும், படிப்பினையும் தருவதாக இருந்தது. ஒவ்வொரு சம்பவத்திலும் ஒரு நீதி இருந்தது.*

*அப்படிப்பட்ட நிகழ்வுகளை சுவைபட தொகுத்து, எல்லா வயதினரும் படித்து ரசித்து, அதில் உள்ள நீதிகளை தெளிவாக புரிந்து கொள்ளும் வண்ணம், சிறுநூலாக வெளியிட வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவாக இருந்து வந்தது.*

*அந்த கனவின் வெளிப்பாடே இந்த சிறிய நூல்.*

*பி.எஸ்.ஏ. என்ற அன்பான மனிதரின் வாழ்க்கையில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய நல்ல விஷயங்கள் நிறைந்து இருக்கின்றன.*

*வாழ்வில் சாதனைகள் செய்ய நினைக்கும் இளைஞர்களுக்கு அவர் ஒரு முன்மாதிரி மனிதராக இருக்கிறார்.*

*உண்மையும், உறுதியும், உழைப்பும் இருந்தால் சிகரத்தை தொடலாம் என்பதற்கு நமக்கு நல்ல உதாரணமாக என்றும் திகழ்கிறார் பெரியவர் பி.எஸ்.ஏ. அவர்கள்!*

*அவர் மற்றவர்களுக்கு செய்த உதவிகள், நன்மைகள் எல்லாவற்றையும் அறியும்போது, நாமும் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இயல்பாகவே நம் மனதில் துளிர்க்கிறது.*

*இன்றைய தலைமுறையினருக்கும், நாளைய தலைமுறையினருக்கும் பி.எஸ்.ஏ. அவர்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு இந்த சிறுநூல் ஒரு வழிகாட்டியாய் இருக்கும்.*

*என்றும் அன்புடன்...*

***திருச்சி சையது***



## ஒற்றுமை உயர்வு தரும்!

***பி***.எஸ்.ஏ. அவர்களிடம், அவரது தங்கை தாஸீம் பீவி அவர்களின் மகள் நிலோபர் சின்னக் குழந்தையாய் இருந்தபோது ஒருநாள் “அப்பப்பா! ஏதாவது எனக்கு சொல்லித் தாங்க.” என்று கேட்டது.

*குழந்தை நிலோபரை தூக்கி தன் மடியில் வைத்துக் கொண்டார்.*

*டேபிள் மீது அப்போது நிறைய பென்சில்கள் இருந்தன.*

*அதில் ஒரு பென்சிலை எடுத்து, குழந்தை நிலோபரிடம் கொடுத்த பி.எஸ்.ஏ. அவர்கள் “இதை உடை.” என்று சொன்னார்.*

*உடனே நிலோபர் அதை டக்கென்று உடைத்தது.*

*அப்புறம் மீதி இருந்த 5, 6 பென்சில்களை ஒன்றாக எடுத்து நிலோபரிடம் கொடுத்த பி.எஸ்.ஏ. அவர்கள் “இப்ப இதை உடை.” என்று சொன்னார்.*

*நிலோபரால் உடைக்க முடியவில்லை.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் சொன்னார் :*

*“தனியா ஒரே ஒரு பென்சில் இருந்தப்ப ஈஸியா உடைச்சிடலாம். 6 பென்சிலும் ஒண்ணா இருந்தா உடைக்க முடியாது. இதுமாதிரி நாம் தனித்தனியா இருந்தா நமக்கு வேண்டாதவங்க பிரிச்சிடுவாங்க. நாம எல்லாரும் ஒற்றுமையா இருந்தா யாராலேயும் நம்மைப் பிரிக்க முடியாது.”*

❀

## சிந்தனை செய்!

***பி***.எஸ்.ஏ. அவர்களும், அவருடைய உறவினர் ரமீஸ் தைக்காவும் ஒருமுறை அலுவலக வேலையாக கோலாலம்பூர் போயிருந்தார்கள்.

*அங்கே ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தார்கள்.*

*ஒருநாள் வெளியே வேலையாகப் போய்விட்டு ஹோட்டலுக்கு திரும்பி வந்தார்கள்.*

*கொஞ்சம் களைப்பாக இருந்ததால், ரூம் சர்வீஸ்க்கு போன் பண்ணி, தாகத்துக்கு ஆளுக்கொரு ஜூஸ் ஆர்டர் பண்ணினார்கள்.*

*பி.எஸ்.ஏ. “ஜூஸ் வித்தவுட் ஐஸ்.” என்றார்.*

*ரமீஸ் தைக்கா “வித் ஐஸ்.” என்றார்.*

*உடனே பி.எஸ்.ஏ. அவர்கள் “நீயும் வித்தவுட் ஐஸ் கேள்.” என்று சொன்னார்.*

*அதற்கு ரமீஸ் தைக்கா “இல்லை... எனக்கு ஐஸ் வேண்டும்.” என்றார்.*



*இருவருக்கும் அவரவர் கேட்டபடி சிறிது நேரத்தில் ஜூஸ் டம்ளர்களில் வந்தன.*

*பி.எஸ்.ஏ. அவர்களின் ஜூஸில் ஐஸ் கட்டிகள் இல்லை. ரமீஸ் தைக்காவின் ஜூஸில் நான்கைந்து ஐஸ் துண்டுகள் மிதந்து கொண்டிருந்தன.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் தன் ஜூஸை குடிப்பதற்குமுன், ரமீஸ் தைக்காவிடம் தனது டம்ளரைத் தொட்டுப் பார்க்கும்படி சொன்னார்.*

*ரமீஸ் தைக்காவும் தொட்டார். ஜில்லென்று இருந்தது.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் புன்சிரிப்புடன் அமைதியாகச் சொன்னார் :*

*"தம்பி. பெரிய ஹோட்டல்களில் ஜூஸ் ஆர்டர் பண்ணினால் ஃபிரிஜ்ஜிலிருந்து பழங்களை எடுத்து பிழிந்து தருவார்கள். பழம் எப்போதும் ஜில்லென்று குளிர்ச்சியாக இருக்கும் என்பதால், தனியாக ஜூஸுக்கு ஐஸ் போடத் தேவையில்லை... எனக்கு வந்த டம்ளர் முழுக்க ஜூஸால் நிறைந்திருக்கிறது. நீ ஆர்டர் பண்ணியதில், முக்கால் பாகம் மட்டும்தான் ஜூஸ். மீதி எல்லாம் நீ கேட்ட ஐஸ் கட்டிகள்தான்! உனக்கு கிடைத்தது முக்கால்வாசி ஜூஸ்தான். அதற்கு நீ கொடுப்பது முழு டம்ளர் விலை. ஐஸ் கட்டிகள் உருக உருக, ஜூஸ் ருசி குறைந்துவிடும்."*

## புத்திசாலித்தனம்

***பி****.எஸ்.ஏ. அவர்கள் துபாயில் வசித்தபோது மார்க்கெட்டுக்கு காய்கறி வாங்கப்போகும்போது லுங்கி கட்டிக்கொண்டு, செருப்பு போட்டுக்கொண்டு செல்வார். ரொம்ப தூரமாகவே காரை நிறுத்தச் சொல்லிவிட்டு, நடந்து போவார்.*

*ஒருநாள் அவரது கொள்ளுப்பேத்தி பஷ்னீன் சுலைஹா (ஹாலித் புஹாரி மகள்) கேட்டார்.*

*"முத்துவாப்பா... கார்தான் இருக்கே! கடைக்கிட்டேயே போய் இறங்கிக்கலாமே? ஏன் நடந்து போறீங்க...?"*

*அதற்கு பி.எஸ்.ஏ. அவர்கள் பதில் சொன்னார் :*

*"விபரம் தெரியாம சொல்றியே...! கோட்டு சூட்டு, ஷூ எல்லாம் போட்டுக்கிட்டு கார்ல போய் கடைக்கிட்ட இறங்கினா கடைக்காரன் ஒரு வெலைக்கு பத்து வெலை கூட சொல்வான். ரேட்டையும் குறைக்க மாட்டான். இதே லுங்கி கட்டிட்டு நடந்து போனேன்னா அவன் கரெக்டான வெலை சொல்லுவான். நானும் பேரம் பேசி, அவன் சொன்ன விலையைவிட குறைச்சி வாங்கிட்டு வந்திடுவேன்!"*



## சுவையான ஆலோசனை!

**பி**.எஸ்.ஏ. அவர்கள் ஒருமுறை கிரசெண்ட் பள்ளியின் விடுதிக்கு வந்தார்.

அப்போது விடுதியின் துணைக்காப்பாளராக அறிவியல் ஆசிரியர் முஹம்மது யாகூப் பணியாற்றினார்.

விடுதியின் சுற்றுப்புறம் தூய்மையானதாக இருக்கிறதா என்று பார்வையிட வேண்டும் என்று விடுதியைச் சுற்றிலும் உள்ள அனைத்து இடங்களுக்கும் பி.எஸ்.ஏ. அவர்கள் சென்றார்.

துணைக்காப்பாளரும், ஆசிரியர்களும் பின்தொடர்ந்தார்கள்.

நான்கு புறங்களிலும் பல மாமரங்கள் வளர்க்கப்பட்டிருந்தன.

மரங்களின் அடியில் நிறைய மாம்பிஞ்சுகள் கொட்டிக் கிடந்தன.

உடனே பி.எஸ்.ஏ. அவர்கள் விடுதியில் இருந்து சில கூடைகளை வரவழைத்து, தானே குனிந்து குனிந்து மாவடுகளை எல்லாம் பொறுக்கிக் கூடையில் போட்டார்கள்.

இதைப் பார்த்த துணைக்காப்பாளரும், ஆசிரியர்களும் அவருடன் சேர்ந்து ஆங்காங்கே கிடந்த மாவடுகளைப் பொறுக்கிக் கூடைகளில் போட்டார்கள்.

அப்பொழுது பி.எஸ்.ஏ. அவர்கள் கூறினார் : ''எதையும் அற்ப பொருளாகக் கருதக்கூடாது. வீணாக்கவும் கூடாது. இந்த மாவடுக்களை விடுதியில் பதமாக உப்பு வைத்து, ஊறுகாய் போடச் செய்து மாணவர்களுக்குக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும்.''

## நேர்மைக்கு கிடைத்த பரிசு!

**பி**.எஸ்.ஏ. அவர்கள் ஒருமுறை வியாபார விஷயமாக ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்கு போய் இருந்தார்.

அவர் தங்கியிருந்த ஹோட்டலில் இந்தியாவைச் சேர்ந்த முன்பின் அறிமுகம் இல்லாத ஒரு வியாபாரியும் தங்கி இருந்தார்.

அந்த வியாபாரியிடம், தான் வைர வியாபார நிமித்தமாக டோக்கியோ வந்திருப்பதாக பி.எஸ்.ஏ. அவர்கள் தன்னை அறிமுகம் செய்து கொண்டு நண்பராகி விட்டார்.

நீண்டநேர உரையாடல்களுக்குப் பிறகு இருவரும் வெளியே சென்று வர முடிவெடுத்தார்கள்.

அவர்கள் போகின்ற வழியில் ஒரு சூதாட்ட கிளப் வந்தபோது ''சற்றுநேரம் அங்கே போய் பொழுதை கழிக்கலாம்.'' என்று வியாபாரி நண்பர் சொன்னார்.



*அதற்கு பி.எஸ்.ஏ. அவர்கள் “எனக்கு அப்படிப்பட்ட இடத்திற்குச் சென்று பழக்கம் இல்லை...” என்று சொல்ல, அந்த வியாபாரியும் நடையைத் தொடர்ந்தார்.*

*சற்றுத்தொலைவில் ஒரு ஒயின் ஷாப் வந்தபோது “குளிர் அதிகமாக இருக்கிறது. பியர் அருந்தினால் சற்று இதமாக இருக்கும்.” என்று சொல்லி அந்த வியாபாரி அழைத்தார்.*

*அதற்கு பி.எஸ்.ஏ. அவர்கள் “சூடாக தேனீர் அருந்தாலாமே!” என்று சொல்லி, தனக்கு மதுபானம் அருந்தும் பழக்கம் இல்லை என்பதை நாசூக்காக வெளிப்படுத்தி இருக்கிறார்.*

*“சரி... தேனீரே பருகலாம்...” என்று அந்த வியாபாரியும் பி.எஸ்.ஏ. அவர்களின் விருப்பத்திற்கு இணைந்து கொடுத்தார்.*

*தேனீர் அருந்திக்கொண்டே சிகரெட் பற்றவைத்த அந்த வியாபாரி, பி.எஸ்.ஏ. அவர்களுக்கும் ஒரு சிகரெட்டை எடுத்து நீட்டினார்.*

*அதற்கு பி.எஸ்.ஏ. அவர்கள் “எனக்கு சிகரெட் பிடிக்கும் பழக்கமும் இல்லை.” என்று சொன்னார்.*

*இவை எல்லாவற்றையும் கண்டு வியந்த அந்த வியாபாரி, தன் இருப்பிடத்திற்கு வந்து தன்னிடம் இருந்த உயர்ந்தவகை வைரங்களை பி.எஸ்.ஏ. அவர்களிடம் கொடுத்து, அட்வான்ஸ்கூட பெற்றுக் கொள்ளாமல், ஹாங்காங் சென்று, அதை விற்று கமிஷன் எடுத்துக் கொண்டு மீதி தொகையை அனுப்பும்படி சொன்னார்.*

*“நான் ஏமாற்ற மாட்டேன் என்று எந்த நம்பிக்கையில் இந்த விலை உயர்ந்த வைரங்களை தருகிறீர்கள்?” என்று பி.எஸ்.ஏ. அவர்கள், அவரிடம் கேட்டார்.*

*அதற்கு அந்த வியாபாரி “உங்களுடைய நேர்மையான குணத்தை உங்கள் நடத்தையில் இருந்து தெரிந்து கொண்டேன். ‘எந்த நம்பிக்கையில்?’ என்று நீங்க கேட்டபோதே, நீங்க நம்பிக்கையானவர் என்பதை தெரிந்து கொண்டேன்.” என்று சொல்லி அனுப்பி வைத்தார்.*

*அதே நம்பிக்கையுடன் ஹாங்காங் திரும்பிச் சென்று, நல்ல விலைக்கு வைரங்களை விற்று, முழுத்தொகையையும் அந்த வியாபாரியின் விலாசத்திற்கு பி.எஸ்.ஏ. அவர்கள் அனுப்பி வைத்தார்.*

## *முயற்சி திருவினையாக்கும்!*

***பி***.*எஸ்.ஏ. அவர்கள் ஒருமுறை நியூஜெர்ஸி வீட்டின் பின்புறத்தோட்டத்தில் இருந்தபோது, அப்துல் காதர் ஜூபைரை (தாஸீம் நஜிஹாவின் கணவர்), மகன் ஆரிஃப் ரஹ்மான் வீட்டின் உள்ளே இருந்த கார்ட்லஸ் போனை எடுத்துக்கொண்டு வரச் சொன்னார்.*

*ஜூபைர் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார்.*



*ஆரிஃப் ரஹ்மான் பேசுவதற்காக டயல் செய்தார். ஆனால் சிக்னல் கிடைக்கவில்லை.*

*மறுநாள் அதே தோட்டத்தில் பி.எஸ்.ஏ. அவர்கள் இன்னும் சற்று தூரத்தில் உட்கார்ந்திருந்தார்.*

*எதற்கோ பி.எஸ்.ஏ. அவர்கள் கார்ட்லஸ் போனை எடுத்துக் கொண்டு வரச் சொன்னார்.*

*"சிக்னல் வராது மாமா." என்று ஜூபைர் சொன்னார்.*

*"போயி எடுத்துட்டு வாப்பா." என்று பி.எஸ்.ஏ. அவர்கள் சொன்னார்.*

*"இல்ல வாப்பா.. நேற்று இதே இடத்தில் இருந்துதான் நான் ட்ரெய் பண்ணினேன். சிக்னல் கிடைக்கலை..." என்று ஆரிப் ரஹ்மான் விளக்கம் சொன்னார்.*

*உடனே மாமா ஜூபைரையும், ஆரிஃப் ரஹ்மானையும் ஏற இறங்க பார்த்துவிட்டு "போய் எடுத்துட்டு வாப்பா சொல்றேன்ல...?" என்று திரும்பவும் சொன்னார்.*

*ஜூபைர் மறுபேச்சே சொல்லாமல் வேகமாய் போய் எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தார்.*

*இந்தமுறை பி.எஸ்.ஏ. அவர்கள் முயற்சி பண்ணும்போது உடனே சிக்னல் கிடைத்தது.*

*"ஒருதடவை நடக்கலைன்னா மறுபடியும் நடக்கவே நடக்காதுன்னு எப்படி முடிவு பண்ண முடியும்? முயற்சி பண்ணிப் பார்க்கணும்ப்பா!" என்று அறிவுரை சொன்னார் பி.எஸ்.ஏ. அவர்கள்.*

## *முதலாளி ஆக்கிய முதலாளி!*

***பி****.எஸ்.ஏ. அவர்கள் ஒருநாள் கீழக்கரைக்கு காரில் போகும்போது, ஒரு கிராமத்தின் வழியோரத்தில் ரோட்டில் நின்று இளநீர் விற்பவரிடம், இளநீர் வாங்கும்போது ஒரு ரூபாய் குறைத்து பேரம் பேசினார்.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் கேட்ட விலைக்கு இளநீர் விற்பவர் சம்மதித்தபிறகே, இளநீரை வாங்கினார்.*

*இளநீரை குடித்தபடியே இளநீர் விற்றவரிடம், பி.எஸ்.ஏ. அவர்கள் பேச்சுக் கொடுத்தபோது அவரது ஏழ்மை நிலை தெரிய வந்தது.*

*உடனே பி.எஸ்.ஏ. அவர்கள் ரூ.5,000ஐ எடுத்து இளநீர் விற்றவரிடம் கொடுத்து "நீ பெட்டிக்கடை வைத்து பிழைத்துக் கொள்." என்று சொன்னார்.*

*இளநீர் விற்றவர் ஆடிப்போய் விட்டார்.*



*“எஜமான்! ஒரு ரூபாய்க்கு அவ்ளோ நேரம் பேரம் பேசினீங்க... இப்ப சுளையாய் 5,000 ரூபாயை தூக்கி கொடுக்கறீங்களே!” என்று ஆச்சர்யத்தோடு கேட்டார்.*

*அதுக்கு பி.எஸ்.ஏ. அவர்கள் “அது வியாபாரம். இது தர்மம்.” என்று சொன்னார்.*

*இந்த சம்பவம் நடந்து 3 வருடங்கள் கடந்து ஒருநாள் அந்த சாலையில் பி.எஸ்.ஏ. அவர்கள் காரில் போகும்போது, அந்த ரோட்டில் பல வருடங்களாக கடை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தவர்களிடம் “சுமார் மூணு வருஷத்துக்கு முன்னாடி இந்த இடத்தில் ஒருத்தர் இளநீர் விற்றுக் கொண்டிருப்பாரே... அவரு இப்ப எங்கே இருக்கார்?” என்று விசாரிக்க, அவர்கள் பஜாரில் இருந்த பெரிய கடையை காண்பித்தார்கள்.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் அந்த கடைக்குள் நுழைய, கல்லாவில் உட்கார்ந்திருந்த முதலாளி, பி.எஸ்.ஏ. அவர்களைப் பார்த்ததும் அடையாளம் கண்டுகொண்டு வேகமாக எழுந்து, மகிழ்ச்சியோடு ஓடி வந்து, பி.எஸ்.ஏ. அவர்களின் காலில் விழுந்து “முதலாளி! நீங்க கொடுத்த பணத்தை வெச்சுத்தான் இந்தக் கடை வெச்சேன். உங்களாலதான் இன்னிக்கு நான் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கேன்.” என்று சொன்னார்.*

*உடனே பி.எஸ்.ஏ. அவர்கள் “தயவுசெய்து காலில் விழாதேப்பா!. உனக்கு திறமை இருந்துச்சு. இறைவனோட அருளும் இருந்துச்சு. .. உன்னோட உழைப்பாலே முன்னுக்கு வந்திருக்கேப்பா!” என்று சாதாரணமாய் சொல்லி, அவர் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டுச் சென்றார்.*

❀

## *அர்த்தமுள்ள குட்டிக்கதை!*

***பி**.எஸ்.ஏ. அவர்களுக்கும், அவரது மகன் அஹ்மது புஹாரிக்கும் அடிக்கடி வாக்குவாதம் வரும். மகன்மீது ரொம்ப கோப்படுவார்.*

*“நான் சொல்றபடி பண்ணாம நீ உன் சொந்த ஐடியாவிலே பண்றே.” என்று கோபித்துக் கொள்வார்.*

*ஒருநாள் பி.எஸ்.ஏ. அவர்கள், மகன் அஹ்மது புஹாரியை பக்கத்தில் கூப்பிட்டு ஒரு கதை சொன்னார் :*

*“ஒரு வீட்டில வாப்பாவும் மகனும் இருந்தாங்களாம். வாப்பா எப்பப் பார்த்தாலும் மகனைத் திட்டிக்கிட்டே இருப்பாங்களாம். நீ அதப் பண்ணலை... இதப் பண்ணலைன்னு மகனை குறை சொல்லிக்கிட்டே இருப்பாங்களாம். மகன் நல்லா பண்ணிக்கிட்டு இருந்தானாம். ரொம்ப பெட்டரா பண்ணிக்கிட்டு இருந்தானாம். இருந்தும் வாப்பா அவன்கிட்ட ஏதாவது குறை கண்டுபிடிச்சு அவனை குற்றம் சொல்லிக்கிட்டே இருந்தாராம்.*



*பொறுத்துப் பொறுத்துப் பார்த்த மகன் ஒருநாள் வெறுத்துப்போய், ஒரு பெரிய கல்லை எடுத்துக்கிட்டு மாடிமேலே நின்னுக்கிட்டு, வாப்பா வர்றப்ப அவர் தலையில போடணும்னு காத்துக்கிட்டு இருந்தானாம்.*

*எப்பயும் வாப்பா தனியாத்தான் வருவாரு... ஆனா அன்னிக்கு வாப்பாகூட அவரோட நண்பர் ஒருத்தரும் வந்தாராம்.*

*அவரு வாப்பாகிட்டே "உங்க மகன் நல்லாத்தானே முன்னுக்கு வந்துக்கிட்டு இருக்கான். எல்லாக் காரியங்களையும் புத்திசாலித்தனமாத்தானே செஞ்சுக்கிட்டு வர்றான்... பாவம்... அவனை எந்நேரமும் திட்டிக்கிட்டே இருக்கீங்களே...?"ன்னு கேட்டார்.*

*அதுக்கு அந்த வாப்பா "நான் என் மகனை திட்றதா நினைக்கலை... இப்படி நான் ஒவ்வொரு விஷயத்திலும் உன்னிப்பா கவனிச்சு திட்டத்திட்ட, அவன் இன்னும் அந்த வேலையை முழுமூச்சாய் செஞ்சு நெம்பர் ஒண்ணுன்னு பேர் எடுப்பான்.... அதுக்குத்தான் அவன் நான் தயார் படுத்தறேன். வைரத்தை பட்டை தீட்டற மாதிரி!"ன்னு சொன்னாராம்.*

*அதைக்கேட்ட அந்த மகன் வேகமாய் மாடியில இருந்து இறங்கி, அழுதுகிட்டே வாப்பாகிட்டே வந்து "என்னை மன்னிச்சிடுங்க வாப்பா... உங்க மனசு தெரியாம நான் உங்களை தப்பா நினைச்சிட்டேன்."ன்னு மன்னிப்பு கேட்டானாம்."*

*- இந்த கதையை சொல்லிட்டு மகன் அஹ்மது புஹாரியை கூர்மையாக பார்த்துக்கொண்டு, அவர் முதுகை தட்டிக் கொடுத்து, அவர் தலைமுடியை கோதி "இந்தக் கதை உனக்கு புரியுதாப்பா...?" என்று பிரியத்தோடு கேட்டார் பி.எஸ்.ஏ. அவர்கள்.*

## *சந்தோஷத்தில் பெரிய சந்தோஷம்!*

*__பி__.எஸ்.ஏ. அவர்கள், சின்னப் பிள்ளையாய் இருக்கையில் பிஸ்கட் வாங்குவார்.*

*அதை பிஸ்கட்டே வாங்க முடியாத ஏழைப் பிள்ளைகளுக்குப் போய் ஓசியில் கொடுப்பார்.*

*அதை வாங்கி அந்தப் பிள்ளைகள் சந்தோஷமாய் சாப்பிடுவதைப் பார்த்து இவர் சந்தோஷப்படுவார்.*

## *விளையும் பயிர்!*

*__பி__.எஸ்.ஏ. அவர்கள், 7 வயது சிறுவனாக இருந்தபோது அவர் தனது உறவுக்கார பாட்டியிடம் காலையில் சென்று ஒரு ரூபாய் கேட்டார்.*

*"எதுக்குப்பா உனக்கு காசு...?" என்று அந்த பாட்டி கேட்டார்.*



*அதுக்கு பி.எஸ்.ஏ. அவர்கள் "ஒரு விஷயம் இருக்கு... காசு தாங்க..." என்று சொல்லி, ஒரு ரூபாயை வாங்கிக் கொண்டு போனார்.*

*பிறகு இரவு வந்து அந்த ஒரு ரூபாய் காசை திருப்பித் தந்துவிட்டார்.*

*"இப்பயாவது சொல்லு... காலையில இதே ரூபாயை வாங்கிட்டுப் போனே! இப்ப கொண்டு வந்து திருப்பி கொடுத்துட்டே! எதுக்கு வாங்கிட்டுப் போனே...? சொல்லுப்பா!" என்று அந்த பாட்டி ஆர்வத்தோடு கேட்டார்.*

*அதற்கு பி.எஸ்.ஏ. அவர்கள் சொன்னார் : "டவுனு கடையில மீனு ஷேப்ல கலர் கலராய் பிஸ்கெட் கிடைக்குமாம்... அதை அந்த ஒரு ரூபாவுக்கு வாங்கி, ஒன்றரை ரூபாய்க்கு வித்துட்டு, இலாபம் 50 பைசாவை நான் எடுத்துக்கிட்டு, உங்ககிட்ட வாங்கின ஒரு ரூபாயை திருப்பித் தந்தேன்..."*

*இதைக் கேள்விப்பட்ட அந்த பாட்டி, ஏழு வயசு சிறுவனாய் இருந்த பி.எஸ்.ஏ. அவர்களை கட்டிப்பிடிச்சு "ராசா! நீ நல்லா வருவேடா கண்ணு!" என்று மனசார வாழ்த்தினார்.*

❁

## ஓய்விலும் வேலை!

***பி**.எஸ்.ஏ. அவர்கள் எப்போதும் வியாபாரச் சிந்தனையோடுதான் இருப்பார்.*

*பொழுதுபோக்குவதற்காக தனியாக ஒரு நேரத்தை ஏற்படுத்திக் கொள்ள மாட்டார்.*

*ஒருமுறை அவரது மகன் ஆரிப் ரஹ்மான் தன் நண்பர்களுடன் சிங்கப்பூருக்கு சுற்றுப்பயணம் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.*

*"தம்பி! எங்கே போகிறாய்...?" என்று கேட்டார் பி.எஸ்.ஏ. அவர்கள்.*

*போகும் நாட்டை சொன்னார் ஆரிப் ரஹ்மான்.*

*"சரி.. அந்த நாட்டில் நமக்கு வேண்டிய வியாபாரிகள் இன்னார் இன்னார் இருக்கிறார்கள். உன் சுற்றுலாவுக்கு இடையில் அவர்களைப் போய் பார்த்துவிட்டு வா..." என்று சொன்னார் பி.எஸ்.ஏ. அவர்கள்.*

❁

## பலவீனம் பலமானது!

***பி**.எஸ்.ஏ. அவர்கள் லண்டனுக்கு முதல் தடவை போகும்போது நண்பர்கள் எல்லாரும் "லண்டன்ல வெள்ளைக்காரங்க எல்லாம் குடிப்பாங்க. அங்க நீங்க அவங்களோட குடிக்கலைன்னா உங்களுக்கு பிசினஸ் தரமாட்டாங்க." என்று சொன்னார்கள்.*



*லண்டனில் ஒரு பார்ட்டியில் பெரிய பெரிய பிஸினஸ்மேன் எல்லாம் கலந்து கொண்டார்கள்.*

*அப்ப அவர்கள் ட்ரிங்கஸ் குடிக்கச் சொன்னபோது பி.எஸ்.ஏ. அவர்கள் “ஸாரி... எனக்கு இந்தப் பழக்கம் கிடையாது. நான் குடிக்க மாட்டேன்.” என்று சொன்னார்.*

*மறுநாள் காலையில் நேற்று நடந்த பார்ட்டியில் கலந்துகொண்ட ஜேம்ஸ் என்ற பிஸினெஸ்மேன், பி.எஸ்.ஏ. அவர்களை அழைத்துக்கொண்டு போய் லண்டனில் இருந்த முக்கிய பிஸினெஸ்மேன்களிடம் “ஹி ஈஸ் டஸ் நாட் ட்ரிங்.” என்று சொல்லி அறிமுகப்படுத்தி வைத்து, பி.எஸ்.ஏ. அவர்கள் வந்த பிஸினெஸ்ஸை வெற்றிகரமாக முடிக்க உதவினார்.*

## ***வீண்செலவை தவிர்***

***பி**.எஸ்.ஏ. அவர்கள் ஒருமுறை உடம்பு முடியாமல் மருத்துவமனையில் அட்மிட்டாகி இருந்தார்.*

*அவருடன் பிஸ்னெஸ் பண்ணும் நண்பர் ஒருவர் அவரைப் பார்க்க வந்தபோது பொக்கே (பூங்கொத்து) கொடுத்தார்.*

*“இது எவ்வளவு...?” என்று பி.எஸ்.ஏ. அவர்கள் கேட்டார்.*

*வந்தவர் “இருநூறு ரூபாய்.” என்றார்.*

*உடனே பி.எஸ்.ஏ. அவர்கள் “அப்ப இந்த பொக்கேயை நீங்களே வெச்சுக்கிட்டு, இருநூறு ரூபாயை எனக்கு கொடுங்க.” என்று கேட்டார்.*

## ***இதுதான் டேஸ்ட்டான பழம்!***

***பி**.எஸ்.ஏ. அவர்கள், டெல்லியில் வசித்த பேத்தி பஷ்னீன் சுலைஹாவை பார்க்கச் சென்றார்.*

*அப்போதுதான் பஷ்னீன் சுலைஹாவுக்கு திருமணமான புதிது. வீட்டு வேலை ஏதும் பண்ணி பழக்கம் கிடையாது.*

*தன் தாத்தாவுக்கு ஏதாவது பண்ண வேண்டும் என்று நினைத்து அவருக்கு சாப்பாடு பரிமாறினார் பஷ்னீன் சுலைஹா.*

*“பேத்தி என்னை நல்ல கவனிக்கறா!” என்று சொல்லி பி.எஸ்.ஏ. அவர்கள் சந்தோஷமாக சிரித்துக்கொண்டு சொன்னார்.*

*தாத்தாவின் முகத்தில் சந்தோஷத்தைப் பார்த்ததும், மாம்பழம் நறுக்கிக் கொடுக்கலாம் என்று பேத்தி பஷ்னீன், ஆசையாய் மாம்பழத்தை எடுத்து வெட்டத் தெரியாமல் வெட்டி, குழப்பி, அதை டேபிளில் வைப்பதற்கு வெட்கப்பட்டுகொண்டு கொண்டு வரவில்லை.*



*“என்ன இவ்வளவு நேரம் பழம் வெட்டற...? எங்க கொண்டு வரலை...?” என்று பி.எஸ்.ஏ. அவர்கள் கேட்டார்.*

*“இல்ல முத்துவாப்பா... நான் பழத்தை வெட்டத் தெரியாம வெட்டிட்டேன். இன்னொரு பழம் வேலைக்காரங்களை வெட்டச் சொல்லி இருக்கேன்.” என்று பஷீன் சொன்னார்.*

*“புதுப்பழம் வேண்டாம். நீ வெட்டின பழத்தைக் கொண்டாம்மா.” என்று அதை எடுத்துக்கொண்டு வரச்சொல்லி “பரவாயில்லம்மா! இதையெல்லாம் நாங்க சாப்பிடுவோம். எங்க பேத்தி ஆசையா வெட்டின பழமாச்சே! மத்த பழத்தைவிட இதுதான் நல்லா ருசியா இருக்கு!” என்று சொல்லி பி.எஸ்.ஏ. அவர்கள் ரசிச்சு ரசிச்சு சப்புக்கொட்டி சாப்பிட்டார்.*

❀

## நோன்புக்காசு

***பி***.*எஸ்.ஏ. அவர்களை பார்ப்பதற்காக பெருநாளுக்கு உறவினர்கள் எல்லாரும் வருவார்கள். பேத்திகள் எல்லாருக்கும் பி.எஸ்.ஏ. அவர்கள் ஐந்து ரூபாய் காசு தருவார்.*

*சும்மா தர மாட்டார். தந்துவிட்டு, பேத்திகளின் கையைப் பிடித்துக்கொண்டு “இத வெச்சு நீ என்ன செய்வே...?” என்று கேட்பார்.*

*பேத்திகள் “ஏதாவது செய்வேன்.” என்று பதில் சொன்னால் “இது நான் எதிர்பார்த்த பதில் இல்லை...” என்று சொல்வார்.*

*“என்ன செய்வே...? திருப்பிச் சொல்லு...” என்பார்.*

*ஒருமுறை பேத்தி பஷீன் “இத வெச்சு நான் பிஸினஸ் பண்ணுவேன். இதை நான் சேமிச்சுவெச்சு பின்னாடி பெரிசா ஏதாவது வாங்குவேன்.” என்று பதில் சொல்ல,*

*“சபாஷ்... இது கெட்டிக்காரத்தனம்!” என்று சொல்லி தட்டிக் கொடுத்து, நெற்றியில் முத்தம் கொடுத்தார்.*

❀

## இங்கிதம்

***பி***.*எஸ்.ஏ. அவர்கள் ஒரு தடவை தனது வியாபார முக்கியஸ்தருக்கு வீட்டில் விருந்து கொடுத்தார்.*

*விருந்தாளி தட்டில் சாப்பாடு போட்டுக்கொண்டு, முள்ளு பீங்கானில் (இது முள்ளு போடுவதற்காக வைப்பது) மீனை எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிட்டுக்கொண்டு இருந்தார்.*

*முள்ளு பீங்கான் முள்ளு போடுவதற்கு வைப்பது என்பது பி.எஸ்.ஏ. அவர்களுக்கு தெரியும். ஆனால் அவர் வாயைத் திறக்கவில்லை.*

*தான் முள்ளு பீங்கானில் முள்ளை போட்டால் விருந்தாளி, இவ்வளவு நேரம் வேஸ்ட் போடும் பீங்கானிலா நான்*



*சாப்பிட்டுக்கிட்டு இருக்கிறேன் என்று நினைத்து வருந்துவாரே என்று பி.எஸ்.ஏ. அவர்களும் விருந்தாளி மாதிரி மீனை எடுத்து, முள்ளு பீங்கானில் வைத்து சாப்பிட்டார்.*

## வியாபாரம் வேறு... தர்மம் வேறு...

***பி****.எஸ்.ஏ. அவர்கள், ஒருதடவை தெருவில் சைக்கிளில் கொய்யாப்பழம் விற்றுக்கொண்டிருந்தவரிடம் 25 காசோ, 50 காசோ குறைத்து பேரம் பேசிக்கொண்டு இருந்தார்.*

*மறுநாள் வீட்டிற்கு ஒருவர் உதவி கேட்டு வந்தார்.*

*உடனே பி.எஸ்.ஏ. அவர்கள் 50,000 ரூபாயை அப்படியே கொண்டு வந்து கொடுத்தார்.*

## *மறக்க முடியவில்லை!*

***பி****.எஸ்.ஏ. அவர்கள், தன் மகன் ஆரீப் ரஹ்மானுடன் அமெரிக்காவில் நியூயார்க்கில் நடந்து போய் கொண்டிருந்தார்.*

*அங்கே பி.எஸ்.ஏ. அவர்களுக்கு வைரம், மாணிக்கம், நவமணிகள் வியாபாரம் செய்யும் நண்பர்கள் அதிகம் உண்டு.*

*ஒருநாள் இப்படி ரோட்டில் சென்று கொண்டிருக்கும்போது எதிரே வந்த ஒரு வெள்ளைக்காரர், பி.எஸ்.ஏ. அவர்களைப் பார்த்ததும் டக்கென்று நின்றார்.*

*பி.எஸ்.ஏ. அவர்களும் நின்றார்.*

*“யூ ஆர் மிஸ்டர் அப்துர் ரஹ்மான்...?” என்றார் வெள்ளைக்காரர்.*

*“எஸ்...” என்றார் பி.எஸ்.ஏ. அவர்கள்.*

*“நான் 20 வருடங்களுக்குமுன் உங்களை சந்தித்திருக்கிறேன். உங்கள் வீட்டில் எனக்கு விருந்து கொடுத்திருக்கிறீர்கள்!” என்றார் அந்த வெள்ளைக்காரர்.*

*பிறகு அவர் தன் பெயரைச் சொல்லிவிட்டு, 20 வருடங்களுக்குமுன்பு நடந்த சந்திப்பை நினைவூட்டினார்.*

*20 வருடங்கள் கழித்தும் மறந்துவிடாமல், பி.எஸ்.ஏ. அவர்களின் விருந்தோம்பலை ஞாபகம் வைத்திருந்தார் அந்த வெள்ளைக்காரர்.*

## இறைவன் கொடுத்த வரம்!

***பி****.எஸ்.ஏ. அவர்கள், தனது அன்பு மனைவி முத்து சுலைஹா அவர்களுடன் விருந்து ஒன்றிற்கு சென்றார்.*



*அங்கே ஊரில் இருந்த முக்கியஸ்தர்கள் எல்லாம் வந்திருந்தார்கள்.*

*முத்து சுலைஹா அவர்கள் பெண்கள் வரிசையில் போய் உட்கார்ந்து கொண்டார்.*

*விருந்து ஆரம்பித்தவுடன் அங்கிருந்த ஆண்கள் ஒரு கையில் சிகரெட்டோடும், மறுகையில் மதுக்கோப்பையோடும் நின்று கொண்டிருந்தார்கள்.*

*அப்படிப்பட்ட கூட்டத்தில் பி.எஸ்.ஏ. அவர்கள் மட்டும் பழச்சாறு பருகிக் கொண்டிருப்பது தனியாக தெரிந்தது.*

*முத்து சுலைஹா அவர்களின் அருகில் இருந்த சுடிதார் போட்ட பெண் சொன்னார் :*

*"உங்க ஹஸ்பெண்ட் சிகரெட்டையும் தொடலை. மதுவையும் தொடலையே...! நீங்க கொடுத்து வெச்ச பெண்! "*

❁

## ஓய்வு வேண்டாம்!

***பி****.எஸ்.ஏ. அவர்களிடம் "நல்லா இருக்கீங்களா?" என்று யாராவது கேட்டால் "ஏன் என்னைப் பார்த்தா சீக்காளி மாதிரியா தெரியுது...?" என்று பதில் சொல்வார்.*

*பி.எஸ்.ஏ. அவர்கள், தனது மகன் ஆரிப் ரஹ்மானிடம் ஒருநாள் சொன்னார் :*

*"தம்பி! மனுஷன் வாழ்நாள் கடைசிவரைக்கும் உழைக்கணும். அவனுக்கு ரிட்டயர்மெண்ட் கிடையாது. என்னைக்கு அவன் ரெஸ்ட் எடுக்கிறானோ அன்னைக்கே அவனுக்கு நோய் வந்துடும். மனிதனுக்கு ரிட்டயர்மெண்ட்னே ஒண்ணு இருக்கக்கூடாது. கடவுள் படைத்த மனிதனில் குறையில்லாதவனோ, வியாதி இல்லாதவனோ கிடையாது. அதனால் உனக்கு ஏற்படும் சுகக்குறைச்சலை யாரிடமும் சொல்லிக் காட்டாதே!"*

❁

## ஆறுதல்

***பி****.எஸ்.ஏ. அவர்களின் தங்கை தாஸீம் பீவியும், அவரது கணவர் அப்துல்காதரும் விபத்தில் இறந்தபிறகு தங்கை குழந்தைகளையும் தன் குழந்தைகளாய் வளர்த்து வந்தார் பி.எஸ்.ஏ. அவர்கள்.*

*பள்ளியில் நிலோபர் படித்துக் கொண்டிருந்தபோது, மற்ற பிள்ளைகளின் அப்பா அம்மா எல்லாம் அவரவர் பிள்ளைகளைப் பார்க்க வருவார்கள்.*

*அப்போது நிலோபருக்கு தன்னுடைய அப்பா, அம்மா ஞாபகம் வந்து வீட்டுக்கு வந்து அழும்.*



*பி.எஸ்.ஏ. அவர்கள் பதறிப்போய் "ஏம்மா அழுவறே...?" என்று கேட்டார்.*

*அதற்கு நிலோபர் "எனக்குத்தான் வாப்பா, உம்மா இல்லையில்ல...? என் மனவருத்தத்தை யாருகிட்டே போயி நான் சொல்லுவேன்...?" என்று சொல்லி மீண்டும் அழுதது.*

*உடனே பி.எஸ்.ஏ. அவர்கள் "அழாதடா கண்ணு! எனக்கு மட்டும் யாரு இருக்கா? எனக்கும் உம்மா, வாப்பா இல்லைதானே...? என் செல்லத் தங்கச்சியும் இல்லைதானே...? நானும் பாவம்தானே...? நீ உங்க உம்மா வாப்பா போனதுக்கு அழுவறே... என் உம்மா, வாப்பா போனதுக்கு நான் யாருகிட்டே போயி அழுவேன்...? எனக்கு மட்டும் யாரு இருக்கா...?" என்று கண் கலங்கி சொல்லி, நிலோபரின் தலையை ஆறுதலாய் தடவிக் கொடுத்து, தைரியம் கொடுத்தார்.*

❀

## *டாக்டர் செய்த உதவி*

***பி****.எஸ்.ஏ. அவர்களின் பேத்தி மைமூனா (அப்துல் காதரின் மூத்த மகள்) 2 வயது குழந்தையாக இருக்கும்போது யாரிடமும் போகாது. அதன் அம்மா, அப்பா தூக்கினால் மட்டும் சிரிக்கும்.*

*புதிதாக வேறு யாரும் தூக்கினால் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணிவிடும். தாத்தா பி.எஸ்.ஏ. அவர்கள் தூக்கினாலும் கத்தும்.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் தனது குடும்ப டாக்டர் சுரேஷ்குமாரிடம் சென்று "டாக்டர்! என் பேத்தி மைமூனா மேல எனக்கு ரொம்ப ரொம்ப பிரியம். அவளை கொஞ்சணும்னு நெறய்ய ஆசை. ஆனா ஒவ்வொரு முறையும் பயணம் போயிட்டு வந்து குழந்தைகிட்ட ஆசையோட வருவேன். ஆனா அந்தக்குழந்தை என்னைப் பார்த்து பயப்படுது. விலகிப்போகுது. என்கிட்ட ஒட்டாமல் இருக்கு. இது எனக்கு ரொம்ப வேதனையைத் தருது. எப்படி நான் என் பேத்தியோட ஒட்டுதலை ஏற்படுத்திக்கணும்? பேத்தியை எப்படி கவரணும்னு எனக்கு சொன்னா நல்லா இருக்கும்... ப்ளீஸ் சொல்லுங்க டாக்டர்!" என்று கவலையோடு கேட்டார்.*

*அதற்கு டாக்டர் "நீங்க பெரும்பாலும் அடிக்கடி வெளியூர் போயிடறீங்க.... அதனால உங்க முகம் அவ மனசுல பதியலை... உங்க பேத்திகூட ரொம்ப நேரம் டைம் ஸ்பெண்ட் பண்ணுங்க... அப்பத்தான் அவ உங்களோட ஃப்ரெண்ட்லியாய் ஆவாள்!" என்று சொல்லி இருக்கிறார்.*

*உடனே பி.எஸ்.ஏ. அவர்கள், பேத்தியை குற்றாலத்துக்கு அழைத்துக்கொண்டு போனார்.*

*பேத்தியுடனே மூன்று வாரம் இருந்தார். குற்றால அருவியிலே பேத்தியை தூக்கி கொண்டுபோய் முதல்முதலாய் குளிக்க வைத்தார். அவளுக்கு விளையாட்டு காட்டினார். அப்புறம்தான் பேத்தி அவர்கூட நெருக்கமானாள்.*



*குற்றாலத்தில் இருந்து ஊருக்கு வந்ததும் பி.எஸ்.ஏ. அவர்கள் டாக்டர் கையைப் பிடித்துக்கொண்டு "டாக்டர்! நீங்க செஞ்ச உதவியை வாழ்க்கையிலே நான் மறக்கவே மாட்டேன். என் பேத்தி மைமூனா என்மேல இப்ப பிரியமாய் இருக்கா... இப்ப என் முகம் என் பேத்தி மனசுல பதிஞ்சு போயிடுச்சு. என்னைப் பார்த்தாலே அழகாய் சிரிக்கறா! கை நீட்டினா தாவி வர்றா! டாடா காண்பிக்கிறா! எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு! நீங்க செஞ்ச உதவிக்கு ரொம்ப ரொம்ப தேங்க்ஸ் டாக்டர்!" என்று நெகிழ்ச்சியோடு சொன்னார்.*

❀

## *தாயின் திருப்தி!*

***பி****.எஸ்.ஏ. அவர்களின் அம்மா யூசுப் சுலைஹா இறப்பதற்கு சிலமணி நேரங்களுக்குமுன் உடல்நிலை சரியில்லாமல் சீரியஸாக இருந்தார்.*

*அப்போது பி.எஸ்.ஏ. அவர்கள் அவரிடம் சென்று அருகில் உட்கார்ந்து "அம்மா! உங்களுக்கு நான் எதுவும் பண்ணனும்னா சொல்லுங்கம்மா செய்யறேன். உங்க மனசில எதுவும் நிறைவேறாத ஆசை இருந்தா சொல்லுங்கம்மா... நான் செய்யறேன்..." என்று கண் கலங்க கேட்டார்.*

*அதைப் பார்த்த அவரது அம்மா "என் மனசுல ஒரு குறையும் இல்ல ராசா... என்னை நீ ரொம்ப ரொம்ப நல்லா பார்த்துக்கிட்டே... எனக்கு எல்லாமே பண்ணிட்டே! நான் சந்தோஷமா இருக்கேன்டா செல்லம்!" என்று ஆனந்தக் கண்ணீரோடு சொன்னார்.*

❀

## *அன்புக்கட்டளை*

***பி****.எஸ்.ஏ. அவர்கள் முதுமையில் உடம்பு சரியில்லாமல் இருந்தபோது, நர்ஸ்கள் மாத்திரை கொடுத்தால் சாப்பிட மாட்டார்.*

*மருமகள் மரியம் ரபியத், தன் மகள் மைமூனாவை கூப்பிட்டு "மைமூனா! நீ போய் உங்க அப்பப்பாகிட்டே சொல்லு... அப்பத்தான் கேட்பாக." என்று சொன்னார்.*

*பேத்தி மைமூனா, நர்ஸ்களிடமிருந்து மாத்திரையை வாங்கிக் கொண்டு பி.எஸ்.ஏ. அவர்களுக்கு முன்னால் வந்து நின்று "என்ன அப்பப்பா? ஒழுங்கா மாத்திரை சாப்பிட மாட்டீங்களா...?" என்று மிரட்டுகிற மாதிரி உரிமையாக கேட்டது.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் பேத்தியை நிமிர்ந்து பார்த்தார்.*

*அவரை முறைப்பதுபோல் மைமூனா கோபமாய் பார்த்தது.*

*உடனே எதுவும் பேசாமல் வாயை மட்டும் பி.எஸ்.ஏ. அவர்கள் திறந்தார்.*



மைமூனா லபக்கென்று பி.எஸ்.ஏ. அவர்கள் வாயிலே மாத்திரையை போட்டுவிட்டது.

அங்கே இருக்கிற நர்ஸ்கள், மைமூனாவை ஒரு டாக்டரைப் பார்ப்பதுபோல் ஆச்சர்யத்தோடு பார்த்தார்கள்.

## ஏழையும் சிரிக்க வேண்டும்!

**பி**.எஸ்.ஏ. அவர்கள், துபாயில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரியும் ஈ.டி.ஏ.வின் மாடர்ன் பில்டிங் மெயின்டன்ஸ் (எம்.பி.எம்.) ஆரம்பித்தபோது சொன்னார் :

"நான் தினமும் விருந்து சாப்பிடலாம். இறைவன் அதற்குரிய வசதியையும், வாய்ப்பையும் எனக்கு கொடுத்திருக்கிறான். நான் பிரியாணி சாப்பிட்டால் என் பக்கத்து வீட்டுக்காரனும் பிரியாணி சாப்பிட வேண்டும். பட்டினி கிடக்கக் கூடாது. குறைந்தது சுடுசோறாவது சாப்பிட வேண்டும்."

ஏழைகளுக்கு உழைப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வந்து அவர்கள் சுயமாய் சொந்தக்காலில் தன்னம்பிக்கையோடு நிற்பதற்கு பி.எஸ்.ஏ. அவர்கள் துணை புரிந்தார்.

"மீன் கொடுப்பதைவிட, மீன் பிடிக்க தூண்டிலைக் கொடுப்பதுதான் சிறந்தது!" என்று அடிக்கடி பி.எஸ்.ஏ. அவர்கள் சொல்வார்.

## சிவாஜியின் அன்பு!

**பி**.எஸ்.ஏ. அவர்களுக்கு, பதற்றத்தோடு நடிகர் சிவாஜியின் மனைவி கமலாம்பாள் போன் பண்ணி சொன்னார், சினிமா ஷூட்டிங்கிற்காக சிங்கப்பூர் சென்றிருந்தபோது அங்கே சிவாஜிக்கு உடல்நலம் சரியில்லாமல் போய் இருக்கும் செய்தியை.

உடனே பி.எஸ்.ஏ. அவர்கள் சிங்கப்பூரில் இருக்கும் தனது மச்சினன் முஹம்மதுக்கு போன் போட்டு, அவரைப் போய் பார்த்துக் கொள்ளச் சொல்ல, அவர் டாக்டருடன் சென்று சிவாஜியைப் போய் பார்த்து கவனித்துக் கொண்டார்.

பிறகு சிவாஜி குணமாகியவுடன் கீழக்கரை வந்து பி.எஸ்.ஏ. அவர்களுக்கு நன்றியைச் சொல்லிவிட்டுப் போனார்.

அதன்பிறகு ஒவ்வொரு தீபாவளி அன்றும் சிவாஜி வீட்டிலிருந்து பலகாரங்கள், பி.எஸ்.ஏ. அவர்கள் வீட்டுக்கு வரும்.

அதேபோல் ஒவ்வொரு ரம்ஜான் அன்றும், பி.எஸ்.ஏ. அவர்கள் வீட்டிலிருந்து பிரியாணி, சிவாஜி வீட்டிற்கு போகும்.



## இறைவனுக்காக தலைகுனிந்தார்.

*பி.எஸ்.ஏ. அவர்கள் தன் காரியம் ஆக வேண்டும் என்பதற்காக எவரிடமும் நெளிந்து, குழைந்து பேச மாட்டார். எப்போதும் கம்பீரமாய் இருப்பார்.*

*இப்படிப்பட்டவர் ஹாங்காங் பள்ளிவாசல் கட்டுவதற்காக ஏறி இறங்காத அரபு நாடுகளே இருக்காது.*

*சவுதியில் நோன்பு காலத்தில் வெய்யில் நேரத்தில் அரபிகளை பார்க்கறதுக்கு பி.எஸ்.ஏ. அவர்கள் கிளம்பி விடுவார்.*

*பி.எஸ்,ஏ. அவர்களின் அருமை தெரியாமல் சில அரபி முதலாளிகள், அவரை அலையவிட்டும், பி.எஸ்.ஏ. அவர்கள் வெகுநேரம் அவர்களுக்காக காத்திருப்பார்.*

*ஒவ்வொரு கடையாய் ஏறி ஹாங்காங்கில் பள்ளிவாசல் கட்டுகிற செய்தியைச் சொல்லி உதவி கேட்பார். இவரைப் பற்றி தெரியாத சில அரபி முதலாளிகள் "போ... போ... மிஸ்கின் (ஏழ்மையானவன்) வராதே..." என்று சொல்வார்கள்.*

*பி.எஸ்.ஏ. அவர்களால் அந்த அரபியின் கடையை மாதிரி பல கடைகளை விலைக்கு வாங்க முடியும்.*

*அப்போது அருகில் இருந்த ஹாலித் புஹாரிக்கு கோபம் வந்துவிட்டது. "என்ன மாமா... இந்தாளு இப்படி பேசறான்...? வாங்க போகலாம்..." என்று சொன்னார்.*

*அதற்கு பி.எஸ்.ஏ. அவர்கள் "ஒரு நல்ல காரியத்துக்காக இந்த வேலையைச் செய்யறோம்... நாம கோபப்படவே கூடாது. அல்லாஹ்வுக்காக பொறுத்துத்தான் போகணும்..." என்று அமைதியாய் சொல்லிவிட்டு, கோபமாய் பேசிய அந்த அரபி முதலாளியிடம் பணிவாய் நின்று, பக்குவமாய் எடுத்துச் சொல்வார்.*

*இப்போது அந்த முதலாளி, பி.எஸ்.ஏ. அவர்களின் நல்ல நோக்கத்தைப் புரிந்துகொண்டு, பள்ளிவாசல் கட்ட நிதி தருவார். சில கடைகளில் 5000 ரியால் கிடைக்கும். சில கடைகளில் 500 ரியால் கிடைக்கும். சில கடைகளில் 50 ரியால் கிடைக்கும். சில கடைகளில் 5 ரியால் கிடைக்கும்.*

*அவர்களிடம் நயந்துபேசி, அவர்கள் சிறுதுளிகளாக கொடுத்த சிறுசிறு தொகைகளாக பலரிடம் திரட்டி, பிறகு தானும் பெரிய தொகை போட்டு, ஹாங்காங்கில் கௌலூன் பள்ளிவாசலைக் கட்டினார் பி.எஸ்.ஏ. அவர்கள்.*

❀

## தோல்வியிலும் இன்பம்!

*பி.எஸ்.ஏ. அவர்களுக்கும், அவரது மகள் குர்ரத் ஜமீலாவுக்கும் அடிக்கடி வாக்குவாதம் வருவது குர்ஆன் ஓதும்போதுதான்.*

*குர்ரத் ஜமீலா அரபி உச்சரிப்போடு நன்றாக குர்ஆன் ஓதுவார்.*



பி.எஸ்.ஏ. அவர்கள் ஓதும்போது ஜேர், ஜபரை விட்டுவிடுவார்.

“ஏன் வாப்பா? இப்படி தப்பும் தவறுமா ஓதுறீங்க...? ஒழுங்கா ஓதுங்க...” என்று கோபமாய் குர்ரத் ஜமீலா சொல்வார்.

உடனே பி.எஸ்.ஏ. அவர்கள் “நான் சரியாத்தானே ஓதுனேன்..” என்று மல்லுகட்டிக்கொண்டு சொல்வார்.

“இல்ல வாப்பா... இந்த வார்த்தையை இப்படி உச்சரிக்கணும். நீங்க இப்படி உச்சரிச்சீங்க...” என்று குர்ரத் ஜமீலா விளக்கிச் சொல்வார்.

“ஆமா... ஆமா... நீ சொல்றதுதான் சரிமாதிரி இருக்கும்மா...” என்று தன் தவறை திருத்திக் கொள்வார் பி.எஸ்.ஏ. அவர்கள்.

மகளிடம் தோற்றுப்போகிறோமே என்றெல்லாம் வருத்தப்பட மாட்டார். “என் புத்திசாலி மகள்கிட்டேதானே நான் தோற்றுப்போனேன். புத்திசாலி மகளை நான் பெற்று இருக்கேன் என்பதில் எனக்கு பெருமைதான்!” என்று நெஞ்சு நிமிர்த்தி கம்பீரமாய் சொல்வார் பி.எஸ்.ஏ. அவர்கள்.

## உறுதிமொழி

**பி**.எஸ்.ஏ. அவர்கள், பேரன் சுலைமானை (குர்ரத் ஜமீலாவின் மகன்) +2 முடித்தவுடன் கூப்பிட்டு “காலேஜ் எங்கே படிக்க ஆசைப்படறே...?” என்று கேட்டார்.

“அமெரிக்கா போய் படிக்க ஆசைப்படறேன்.” என்று சொன்னார் சுலைமான்.

உடனே பி.எஸ்.ஏ. அவர்கள் கோபமாய் “நான் கட்டி வெச்சிருக்கிற காலேஜ்ல படிக்க மாட்டியா...?” என்று கேட்டார்.

அதற்கு சுலைமான் “எனக்கு அமெரிக்காவில போயி படிக்கத்தான் ஆசை!” என்று சொல்லிவிட்டார்.

தன் மகன் அப்துல் காதரை கூப்பிட்டு “அப்துல் காதர்! இங்க வா... மருமகன் அமெரிக்காவில போய் படிக்கறதுக்கு எல்லா ஏற்பாட்டையும் செய்!” என்று சொன்னார் பி.எஸ்.ஏ. அவர்கள்.

அமெரிக்காவுக்குப் போகும் அன்றைக்கு சுலைமானைக் கூப்பிட்டு “நீ ஆசைப்பட்டபடியே உன்னை, படிக்கறதுக்கு அமெரிக்கா அனுப்புறேன். ஆனால் அங்கே உள்ளவர்கள் பெரியவர்களாக இருந்தாலும் சரி, கல்லூரியில் படிக்கும் மாணவமாணவியராக இருந்தாலும் சரி அவர்கள் அனைவரிடத்திலும் குடிப்பழக்கம் இருக்கும். நமது மார்க்கம் சொல்லும் ஹராம் (அனுமதிக்கப்படாதது.) எது, ஹலால் (அனுமதிக்கப்பட்டது.) எது என்பதை அறிந்து செயல்பட வேண்டும். முக்கியமாகச் சொல்லுகிறேன். நீ மது அருந்தவே கூடாது!” என்று சொல்லி, சுலைமானிடம் உறுதிமொழி வாங்கிக் கொண்டார் பி.எஸ்.ஏ. அவர்கள்.



## தீர்ப்பு

***பி***.எஸ்.ஏ. அவர்களின் பேத்தி சப்ஃஃவா மினாவுக்கு மூக்கு குத்தியது வீட்டில் நிறைய பேருக்கு பிடிக்கலை.

இதையே எல்லாரும் சப்ஃஃவாவிடம் குறையாய் சொல்லிக்கிட்டு இருந்தார்கள்.

ஒரு தடவை வீட்டில் எல்லாரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டு இருந்தார்கள்.

அப்போது சப்ஃஃவா, பி.எஸ்.ஏ. அவர்களிடம் கேட்டார். “நம்மவாப்பா! நான் மூக்கு குத்தி இருக்கறது எப்படி இருக்கு...?”

பி.எஸ்.ஏ. அவர்கள் நிமிர்ந்து பேத்தியைப் பார்த்தார்.

“நல்லாருக்கே! உன் மூக்குல இருக்கறதாலதான் இந்த தங்கமூக்குத்திக்கு அழகுடி என் ராஜாத்தி!” என்று பேத்தியைக் கொஞ்சினார்.

உடனே சப்ஃஃவா சத்தமாக “எல்லாரும் கேட்டுக்குங்க... நம்மவாப்பா சொல்லிட்டாரு, நான் மூக்கு குத்தி இருக்கறது நல்லா இருக்காம்! நல்லா இருக்காம்! நல்லா இருக்காம்!”” என்று சொன்னார்.

பி.எஸ்.ஏ. அவர்கள் சர்ட்டிபிகேட் கொடுத்ததற்கு பிறகு சப்ஃஃவாவின் மூக்கைப் பத்தி பேச யாருக்கும் தைரியம் வரவில்லை.

❁

## எளிமை

***பி***.எஸ்.ஏ. அவர்கள், ஆடம்பரச் செலவு செய்ய மாட்டார். எப்போதும் சாதாரண உடைதான் உடுத்துவார். ரொம்ப சாதாரண வாட்ச் தான் கட்டியிருப்பார். தனது பிள்ளைகளுக்கு எளிமையாக வாழ கற்றுக் கொடுத்தார்.

எப்போதாவது ஏதாவது ஒரு ஹோட்டலுக்கு சாப்பிட அழைத்துப்போனாலும் “சாப்பாட்டுக்கு முன்னாடி ஜூஸ் குடிக்கறது வீண். அது சிக்கனம் மட்டும் அல்ல. நம் உடலுக்கு தேவையான உணவை நாம திண்ண விடாமல், ஜூஸ் நமது வயிறை நிரப்பி விடும்.” என்று சொல்வார்.

❁

## சிக்கனம்

***பி***.எஸ்.ஏ. அவர்கள், தன் பேரன் ரசீன் அஹமதுக்கு (மர்யம் ஹபீப் மகன்) 2 ரூபாய் தருவார்.

கொடுத்துவிட்டு சொல்வார்.

“இந்தக் காசில தங்கச்சிக்கும் பிரிச்சுக் கொடு!”

❁



## *வெளியில் முதலாளி! வீட்டில் தொழிலாளி!*

***பி***.எஸ்.ஏ. அவர்கள் வெளியில் பெரிய தொழிலதிபராக, கோடீஸ்வரராக இருந்தாலும் வீட்டில் இயல்பான, சாதாரண மனிதராய் இருப்பார்.

சிறுகுழந்தைகள் வீட்டில் அசுத்தம் பண்ணிவிட்டால் பி.எஸ்.ஏ. அவர்கள் கூச்சப்படாமல் அவர்களாகவே குழந்தைகளை பாத்ரூம் அழைத்துச் சென்று சுத்தம் செய்வார்.

மிக மலிவான விலையில் வாங்கிய உடைதான் அணிவார். வீட்டில் சிறுசிறு வேலைகளையும் செய்வார்.

## *சிறு குழந்தையையும் மதித்தார்!*

***பி***.எஸ்.ஏ. அவர்கள் தனது நண்பர் நாகூர் ஹனீபா பாடிய "பாத்திமா வாழ்ந்தமுறை உனக்குத் தெரியுமா?" என்ற பாடலை அடிக்கடி ராகமாய் தனது பேத்தி ஃபாத்திமாவிடம் பாடிக்காட்டுவார்.

"அந்த பாட்டு சி.டி. உனக்கு வாங்கித் தாரேன்." என்று சொல்லிக் கொண்டே இருந்தார்.

ஒருநாள் சர்ப்பரைஸ்ஸாக அந்த பாடல் உள்ள சி.டியை வாங்கி வந்து பேத்திக்கு ப்ரெசெண்ட் பண்ணினார்.

குழந்தைகளின் உணர்வுகளுக்குகூட பி.எஸ்.ஏ. அவர்கள் எவ்வளவு மதிப்பு கொடுப்பார் என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம்!

## *கடந்து வந்த பாதை!*

***பி***.எஸ்.ஏ. அவர்கள் மலேசியாவில் வசிக்கும் ஹஸன் அவர்களின் இளைய மகள் மீரா சுலைஹா வீட்டுக்குச் சென்றார்.

அப்போது பினாங்குக்கு அவர்களை பி.எஸ்.ஏ. அவர்கள் அழைத்துக்கொண்டுபோனார்.

ஒருநாள் "டின்னர் சாப்பிட போலாம்." என்று சொல்லிவிட்டு ஒரு ரோட்டுக்கடைக்கு கூட்டிக்கொண்டுபோய் டிபன் வாங்கிக் கொடுத்தார்.

டேபிளின் கீழே பூனை ஓடியது.

அது ஒரு ஸ்டால் கடை. ரொம்ப சிம்பிளாக இருந்தது. பொதுவாய் அதுபோன்ற கடையில் நின்று சாப்பிட கூச்சமாய் இருக்கும்.

ஆனால் பி.எஸ்.ஏ. அவர்கள், ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் உட்கார்ந்து சாப்பிடுவதுமாதிரி, அங்கிருந்த ஒரு சின்ன டேபிளில் உட்கார்ந்து ரசித்து ரசித்து காணாததை கண்டமாதிரி சாப்பிட்டார்.



*அதை மீரா சுலைஹா அதிசயமாய் பார்க்க, "நான் வியாபாரம் செஞ்ச புதுசுல இந்த ரோட்டுக்கடையில வந்து சாப்பிட்டுருக்கேன்... அத மறந்துடக்கூடாதுல்லமா?" என்றார் பி.எஸ்.ஏ. அவர்கள்.*

## *அம்மாவும் நீயே! அப்பாவும் நீயே!*

*__பி__.எஸ்.ஏ. அவர்களின் தங்கை தாஸீம் பீவியும், தங்கை கணவர் அப்துல் காதரும் 1977ல் கார் விபத்தில் இறந்தபோது அவர்களின் ஐந்து குழந்தைகளுக்கும் சிறுவயது.*

*தாய், தந்தை இருவருமே இல்லையென்றால் அந்தக் குழந்தைகள் படும் வேதனை அனுபவித்தவர்களே உணர்வார்கள்.*

*தாய், தந்தையை இழந்த வேதனையில் இருந்த அக்குழந்தைகளுக்கு பிரியமான தந்தையாக பி.எஸ்.ஏ. அவர்களும், அன்பான அம்மாவாக அவரது மனைவி முத்து சுலைஹாவும் இருந்து பாசத்தைப் பொழிந்து, தங்கள் பிள்ளைகளைவிட அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவர்களை வளர்த்து ஆளாக்கினார்கள்.*

*அவர்களுக்கு அம்மா, அப்பா இல்லையே என்ற ஏக்கம் துளிகூட வந்துவிடக்கூடாது என்பதில் அதிக கவனமாக இருந்தார்கள்.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் தனது ஆறு பிள்ளைகளுக்கு என்ன இனிப்பு வாங்கி வருவார்களோ அதே இனிப்பு அவர்களுக்கும்! எந்த உடை தனது பிள்ளைகளுக்கு வாங்கி வருவாரோ அதே உடை அவர்களுக்கும்! தனது மகள்களுக்கு என்ன நகை வாங்கித் தருவாரோ அதே நகை அவர்களுக்கும்! அதில் ஒரு கடுகளவும் வித்தியாசம் காட்டவில்லை.*

*சொத்து, கம்பெனியில் ஷேர் எல்லாம் ஒரு தகப்பன், தாய் பண்ணுவதைவிட பல மடங்கு கூடுதலாய் கிடைப்பதுமாதிரி ஏற்பாடு செய்தார்.*

*தங்கை மகன் ஹாலித் புஹாரியை தன் மூத்த மகனாகத்தான் நினைத்தார். குடும்ப விஷயங்கள் எல்லாவற்றையும் அவருடன் கலந்து பேசி முடிவெடுப்பார்.*

*ஹாலித் புஹாரியையும், அவரது தம்பி சையது புஹாரியையும் அமெரிக்காவிற்கு அனுப்பி உயர்ந்த படிப்பு படிக்க வைத்தார். அம்மா, அப்பா இல்லையே என்ற ஏக்கம் துளிகூட இல்லாமல் அவர்களை வளர்த்தார்.*

*ஹாலித் புஹாரிக்கு தனது கல்லூரியில் முக்கிய பதவியும், அவரது தம்பி சையது புஹாரிக்கு தனது நிறுவனத்தில் முக்கிய பதவியும் கொடுத்தார்.*

*அவர்கள் அனைவருக்கும் நல்ல முறையில் திருமணம் செய்து வைத்தார்.*



தங்கை மகள் நிலோபரை தனது மூத்த மகன் ஆரிஃப் புஹாரிக்கு திருமணம் செய்து வைத்து, அவர்கள் வீட்டிற்கு மூத்த மருமகளாக்கிக் கொண்டார்.

## பட்டப்பெயர்!

***பி***.எஸ்.ஏ. அவர்கள் தனது பேத்தி ஃபாத்திமாவுக்கு (ஜரீனா ஹஸனின் மகள்) 4 வயதாய் இருந்தபோது ஒருமுறை விடுமுறையில் குற்றாலத்தில் இருந்தார்.

பேத்தி ஃபாத்திமாவைப் பார்த்து "வா! வெளியே போயிட்டு வரலாம்" என்று அழைத்தார்.

உடனே ஃபாத்திமா "இப்ப நான் பிஸியா இருக்கேன். உங்களுக்காக நான் வரணும்னு இருந்தா வர்றேன்." என்று அவரிடம் சொல்ல, பக்கத்தில் இருந்தவர்கள் எல்லோரும் சிரித்துவிட்டார்கள்.

அன்றிலிருந்து பேத்தி ஃபாத்திமாவைப் பார்க்கும் போதெல்லாம் பி.எஸ்.ஏ. அவர்கள் "பிஸியம்மா!" என்றுதான் செல்லமாய் அழைப்பார்கள்.

## பாசமலர்கள்

***பி***.எஸ்.ஏ. அவர்கள் தன் தங்கை தாஸீம் பீவி மிது உயிரையே வைத்திருந்தார்.

'பாசமலர்' படத்தில் சிவாஜி தன் தங்கை சாவித்திரியைப் பார்த்து 'மலர்களைப்போல் தங்கை உறங்குகின்றாள்... அண்ணன் வாழ வைப்பானென்று அமைதி கொண்டாள்!' என்று ஒரு பாடல் வரும்.

அதைவிட ஆயிரம் மடங்கு பி.எஸ்.ஏ. அவர்கள் தன் தங்கையை நேசித்தார்.

அவர் தன் தங்கை மீது வைத்திருக்கும் பாசத்தைப் பார்க்கும் எந்தப் பெண்ணும் 'இப்படிப்பட்ட ஒரு நல்ல அண்ணனுக்கு நாம் தங்கையாய் பிறக்க வேண்டும்.' என்று ஆசைப்படுவாள்.

## வாக்கை நிறைவேற்றினார்.

***பி***.எஸ்.ஏ. அவர்கள் தன் பேத்தி சனாவின் (சையது புஹாரியின் மகள்) கையைப் பிடித்துக்கொண்டு "சனா! நீ குழந்தையாய் இருக்கும்போது உன்னை சனாவுக்கு (ஏமன் நாட்டின் தலைநகர்) கூட்டிட்டுப் போறேன்னு சொல்லி இருக்கேன்." என்று அடிக்கடி சொல்வார்.



*2007ல் பேத்தி சனாவை, சனாவுக்கு அழைத்துச் சென்று சுற்றிக் காண்பித்தார் பி.எஸ்.ஏ. அவர்கள்.*

*திரும்பி துபாய் ஏர்போர்ட் வந்து இறங்கிய உடனே பி.எஸ்.ஏ. அவர்கள் பேத்தி சனாவைப் பார்த்து "சனாம்மா... உனக்கு நான் கொடுத்த வாக்குறுதியை காப்பாத்திடேன்டா!" என்று மகிழ்ச்சியாய் சொன்னார்.*

❁

## குழந்தை மனது

***பி**.எஸ்.ஏ. அவர்கள் மலேசியா சென்றபோது அங்கு உள்ள சென்ட்ரல் பேங்க் கவர்னர் இரவு 8 மணிக்கு அவரை தன் வீட்டுக்கு வரச் சொல்லி இருந்தார்.*

*பகலில் பிஸியாக இருந்ததால் அவர் இரவு பேசறதுக்கு வரச் சொல்லி இருந்தார்.*

*பேங்க் கவர்னர் தன்னை சாப்பிட வீட்டுக்கு விருந்துக்குத்தான் கூப்பிட்டு இருக்கார் என்று நினைத்து பி.எஸ்.ஏ. அவர்கள் போய் இருந்தார்.*

*பேங்க் கவர்னர் பேசிக்கொண்டே இருந்தார்.*

*கொஞ்ச நேரம் கழித்து கவர்னர், பி.எஸ்.ஏ. அவர்களைப் பார்த்து "டீ சாப்பிடறீங்களா? பிஸ்கெட் சாப்பிடறீங்களா?" என்று விசாரித்தார்.*

*அதற்கு பி.எஸ்.ஏ. அவர்கள் "இல்ல... இன்னும் கொஞ்ச நேரத்துல விருந்து தரப்போறீங்க.. டீயும், பிஸ்கெட்டும் சாப்பிட்டால் விருந்து சரியா சாப்பிட முடியாது. டைரக்டாவே விருந்து சாப்பிடலாம்." என்றார் கள்ளம்கபடம் இல்லாமல்.*

❁

## தனிப்பிறவி

***பி**.எஸ்.ஏ. அவர்கள், மேலப்பாளையத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நடத்தப்படுகிற பள்ளிக்கு உதவி கேட்டு வந்த ஒரு செய்தியை பத்திரிகையில் படித்தார்.*

*உடனே அவர் தனது மருமகன் எம்.கே. முஹம்மது ஹஸனை அழைத்து "வா... அந்த ஸ்கூலுக்கு போவோம்.." என்று சொல்லி, மேலப்பாளையம் சென்று அந்த ஸ்கூல் நடத்துவதற்கு உதவி செய்தார்.*

*மற்றவர்கள் வந்து கேட்டால்தான் உதவி செய்ய வேண்டும் என்ற சம்பிரதாயம் எல்லாம் அவரிடம் இல்லை. யாருக்கு உதவி தேவைப்படுகிறதோ அவர்களை பி.எஸ்.ஏ. அவர்களே தேடிப் போய் சந்தித்து உதவி செய்வார்.*

❁



## *மரியாதை*

***பி****.எஸ்.ஏ. அவர்கள், தன் தங்கை கணவர் அப்துல் காதருக்கு மிகுந்த மரியாதை கொடுப்பார்.*

*ஒருதடவை மெக்காவில் உள்ள கஃபத்துலாவுக்கு இருவரும் போயிருந்தார்கள்.*

*அப்போது பி.எஸ்.ஏ. அவர்கள், அப்துல் காதரிடத்தில் "என்கூடயே நில்லுங்க மச்சான்! கஃபத்துல்லாவுக்கு உள்ளாற உங்களை அழைச்சிட்டுப்போறேன்." என்று சொன்னார்.*

*கஃபத்துல்லாவுக்கு உள்ளே போய் பார்க்க எல்லாம் வாய்ப்பு கிடைக்காது என்று நினைத்து அப்துல் காதர் தூரத்திலேயே நின்றுவிட்டார்.*

*பி.எஸ்.ஏ. அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்து, கஃபதுல்லாவுக்கு உள்ளே போய் விட்டார்.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் வெளியே வந்தவுடன் அப்துல் காதர் அவரைக் கட்டிப்பிடித்து "மச்சான்! நீங்க பெரிய ஆளுன்னு எனக்குத் தெரியும். இவ்ளோ பெரிய ஆளுன்னு இன்னிக்குத்தான் தெரிஞ்சுக்கிட்டேன். உங்களுக்கு அல்லாஹ்வோட ரஹ்மத் நெறய்ய இருக்கு மச்சான்!" என்று கண்ணீரோடு சொன்னார்.*

❁

## *கற்றுக்கொள்ள வேண்டும்*

***பி****.எஸ்.ஏ. அவர்கள் எந்த அலுவலகத்திற்கு போனாலும் சரி, வாட்ச்மேன் சலாம் சொன்னால்கூட நின்று, இன்முகத்துடன் வாட்ச்மேனுக்கு பதில் சலாம் சொல்லிட்டு போவார்.*

*அதேபோல் விருந்தாளிகள் வீட்டுக்குபோனாலும் தோட்டக்காரன், சமையல்காரன் இப்படி யார் சலாம் சொன்னாலும், பி.எஸ்.ஏ. அவர்கள் பதில் சொல்லிவிட்டு அவர்களை அக்கறையுடன் நலம் விசாரிப்பார். சில சமயங்களில் மற்றவர்கள் சலாம் சொல்வதற்கு முன்பே பி.எஸ்.ஏ. அவர்கள், தான் முந்திக்கொண்டு அவர்களுக்கு சலாம் சொல்வார்கள்.*

*"யாரு முதல்ல சலாம் சொல்றாங்களோ அவங்களுக்கு அதிக நன்மைகளை அல்லாஹ் தருவான்!" என்று பி.எஸ்.ஏ. அவர்கள் சொல்வார்.*

*அதேமாதிரி யாரிடமும் முறைத்துக்கொண்டு பேசாமல் இருக்க மாட்டார்கள்.*

*"என்னதான் கருத்துவேறுபாடு வந்தால்கூட உண்மையான முஸ்லிம் 3 நாளைக்குள்ள அவங்ககிட்டே பேசிடுவான்." என்று சொல்வார்.*

❁



## பணம் வந்தும் குணம் மாறாதவர்!

***பி***.எஸ்.ஏ. அவர்கள், ஒருநாள் முக்கியஸ்தர்களுடன் ரெயிலில் பயணம் செய்வதற்காக காத்திருந்தார்.

ரெயில் நின்றவுடன் அதிலிருந்து இறங்கிய டிக்கெட் செக்கர் பி.எஸ்.ஏ. அவர்களைப் பார்த்தவுடன் "டேய் அப்துர் ரஹ்மான்!" என்று சத்தமாய் கத்தியபடியே வர, அருகில் இருந்தவர்களுக்கு அதிர்ச்சியாய் போய் விட்டது.

பி.எஸ்.ஏ. அவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்! பொது இடத்தில் அவரை மரியாதைக்குறைவாக ஒருவர் "டேய்..." என்று அழைப்பதா? என்று சுற்றி இருந்தவர்கள் திடுக்கிட்டுப்போய் பார்த்தார்கள்.

அதற்குள் அருகே வந்துவிட்ட டிக்கெட் செக்கர் மறுபடியும் "டேய் அப்துர் ரஹ்மான்! என்னைத் தெரியுதா...?" என்று சத்தமாய் கேட்டார்.

டிக்கெட் செக்கரை யோசனையோடு பார்த்த பி.எஸ்.ஏ. அவர்களின் முகத்தில் மின்னலாய் ஒரு மலர்ச்சி.

பாய்ந்து டிக்கெட் செக்கரை கட்டிப்பிடித்துக் கொண்ட பி.எஸ்.ஏ. அவர்கள் "நாம ரெண்டு பேரும் சின்ன வயசிலே ஒண்ணா படிச்சோம்ல... எப்படிப்பா இருக்கே...?" என்று தனது நட்பை வெளிப்படுத்தினார்.

❁

## ஓடி விளையாடு பாப்பா!

***பி***.எஸ்.ஏ. அவர்களின் பேத்தி (ஜீனத்தின் மூத்த மகள்) நஹ்லாவுக்கு 7 வயது இருக்கும். அப்போது பாண்ட்னனா கார்டன் போய் இருந்தார்கள். பிள்ளைகள் எல்லோரும் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

பி.எஸ்.ஏ. அவர்கள் வந்தவுடன் ஜீனத், எல்லா பிள்ளைகளையும் பார்த்து "உஷ்ஷ்... சத்தம் போடக்கூடாது" என்று அட்வைஸ் பண்ணினார்.

எல்லாரும் அமைதியாகி விட்டார்கள்.

அப்போது பி.எஸ்.ஏ. அவர்கள், இதுவரைக்கும் பிள்ளைகள் எப்படி விளையாடிக்கிட்டு இருந்தார்களோ அப்படி அவர்கள், பிள்ளைகளிடம் விளையாட ஆரம்பித்தார்கள்.

❁

## உள்ளம் கவர் கள்வன்!

***பி***.எஸ்.ஏ. அவர்கள் விமானத்தில் பயணிக்கும்போது பாத்ரூம் போய்விட்டு திரும்பி வரும்போது, உட்கார்ந்திருக்கும்



*வெளிநாட்டுக்காரர்களைப் பார்த்து "ஹலோ..." "ஹாய்..." என்று ஸ்டைலாக இங்கிலீஷ் பேசுவார்.*

*அவர் பேசும் ஸ்டைலைப் பார்த்து விமானத்தில் பயணம் பண்ணும் எல்லாருமே சிரித்துவிடுவார்கள். அந்த அளவுக்கு பி.எஸ்.ஏ. அவர்களிடத்தில் ஒரு வசீகரம் இருந்தது.*

*சிலர் விமானத்தில் உட்கார்ந்தவுடன் அமைதியாய் புத்தகம் படித்துக்கொண்டோ, டி.வி. பார்த்துக்கொண்டோ, பக்கத்தில் இருப்பவர்களிடம் ஒரு வார்த்தைகூட பேசாமல் மூடி டைப்பாக இருப்பார்கள். அவர்கள்கூட பி.எஸ்.ஏ. அவர்களின் பேச்சை ரசிப்பார்கள்.*

*சிலர் அவர்களாகவே வந்து தன்னை பி.எஸ்.ஏ. அவர்களிடம் அறிமுகப்படுத்திக்கொண்டு ஃப்ரெண்ட்ஸாகி பேசுவார்கள். அவர்களுக்கும் நல்ல பேச்சுத்துணை கிடைத்த மாதிரி இருக்கும்.*

## *தங்கை செய்த உதவி!*

***பி****.எஸ்.ஏ. அவர்கள் தொழில் ஆரம்பிக்கணும் என்று நினைத்தபோது அவ்வளவு பணம் அவரிடம் இல்லை.*

*அப்போது அவரது தங்கை தாஸீம் பீவி திடீர்னு தன் கையிலயும், கழுத்துலயும் போட்டுக்கிட்டு இருந்த நகைகளைக் கழட்டி "காகா! இத வெச்சுக்குங்க." என்று சொல்லி கொடுத்தார்.*

*"வேண்டாம்மா... மச்சான்கிட்டகூட கேட்காம கொடுக்கறியே...?" என்று பி.எஸ்.ஏ. அவர்கள் அதனை வாங்குவதற்கு தயங்கினார்.*

*அதற்கு தாஸீம் பீவி "என் நகையை உங்களுக்காக கொடுத்தேன்னு தெரிஞ்சா, உங்க மச்சான் சந்தோஷம்தான் படுவாங்க. திட்ட மாட்டாங்க..." என்று சொன்னார்.*

## *நளினமாய் ஒரு புகார் மனு*

***பி****.எஸ்.ஏ. அவர்களின் கிரசெண்ட் இன்ஜினியரிங் காலேஜில் ஒரு ஃபங்ஷன் ஒன்று நடந்தது. அதற்கு அப்போதைய முதல்வராய் இருந்த கலைஞர் அவர்கள் தலைமை தாங்கினார்.*

*அப்போது பி.எஸ்.ஏ. அவர்கள் கூடுவாஞ்சேரி தோட்டத்தில் இருந்தார்.*

*ஃபங்ஷன் ஆரம்பித்து நடந்து கொண்டு இருந்தது.*

*நடுவில் பி.எஸ்.ஏ. அவர்கள் வந்து சேர்ந்து கொண்டார்.*

*வந்தவுடன் மேடையில் ஏறி பி.எஸ்.ஏ. அவர்கள் மைக்கை பிடித்து "முதலமைச்சர் கலைஞரால்தான் எனக்கு ஃபங்ஷனுக்கு வர சுணக்கமாயிடுச்சு... (லேட்டாயிடுச்சு)" என்று சொன்னார்.*



*கூட்டத்திலே சலசலப்பு உருவாகிவிட்டது.*

*உடனே கலைஞர் "என்னாலே என்ன லேட்டு...? நான்தான் சீக்கிரமே வந்துட்டேனே!" என்றார்.*

*அதற்கு பி.எஸ்.ஏ. அவர்கள் "கூடுவாஞ்சேரியில இருந்து நான் வர்றப்ப ரோடு சரியில்லை... அதனால என் காரு வர லேட்டாயிடுச்சு..." என்று சொன்னார்.*

*'இந்த ரோடு சரியில்லை.' என்பதை மறைமுகமாக பி.எஸ்.ஏ. அவர்கள் சுட்டிக்காட்டினார்.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் நாசூக்காய் சொன்னதை கலைஞர் புரிந்துகொண்டு, மறுநாளே அந்தப்பாதையில் நல்ல ரோடு போடுவதற்கு உத்தரவு போட்டார்.*

## *அழுத காரணம் ...*

***பி.****எஸ்.ஏ. அவர்கள் ஒருதடவை தனது பேத்தி மிப்ராஜை (ஜீனத்தின் மகள்) பார்த்தபோது அவர் கண் கலங்கி விட்டது. ரூமுக்குள் போய் விட்டார்.*

*உடனே மிப்ராஜ், அவரின் ரூமுக்கு ஓடிப்போய் "ஏன் முத்துவாப்பா.... அழுதீங்க...?" என்று கேட்டார்.*

*அதற்கு பி.எஸ்.ஏ. கண்களை துடைத்தபடி சொன்னார் : "நீ என் தங்கச்சி தாஸீம்பீவி மாதிரியே இருக்கேம்மா!"*

## குழந்தைகள்மீது பாசம்

***பி.****எஸ்.ஏ. அவர்கள் விமானத்தில் பயணம் செய்யும்போது, பணிப்பெண்கள் தரும் சாக்லேட்டுகளை வாங்கி தனது சட்டை பாக்கெட்டில் பத்திரமாக வைத்துக்கொள்வார்.*

*விமானத்தைவிட்டு இறங்கி வெளியே வரும்போது தன்னை அழைப்பதற்காக வந்திருக்கும் பெரியவர்களோடு இருக்கும் குழந்தைகளுக்கு, அந்த சாக்லேட்டுகளைக் கொடுத்து அவர்கள் சந்தோஷம் அடைந்து சிரிப்பதைப் பார்த்து இவரும் சிரித்து மகிழ்வார்.*

## கொடுத்த வாக்கு

***பி.****எஸ்.ஏ. அவர்கள் ஒரு விழாவுக்கு தலைமை தாங்க வேண்டி இருந்தது.*

*ரொம்ப துரத்தில் இருந்து வரவேண்டிய நிர்ப்பந்தம்.*

*வரும் வழியில் அவர் வந்த கார், இன்ஜின் கோளாறால் ரிப்பேராகி ரோட்டில் நின்றுவிட்டது.*



*டிரைவர் கீழே இறங்கி பானட்டை திறந்து பார்த்தார்.*

*"என்னப்பா ஆச்சு...?" என்று பி.எஸ்.ஏ. அவர்கள் கேட்க, அதற்கு டிரைவர் "கார் இப்ப ரெடியாவறது கஷ்டம் முதலாளி.." என்று சொன்னார்.*

*உடனே பி.எஸ்.ஏ. அவர்கள் ரோட்டில் வந்த பைக்காரரை நிறுத்தி, அவரிடம் நிலைமையைச் சொல்லி லிஃப்ட் கேட்டு, அந்த விழாவுக்கு சரியான நேரத்தில் போய் சேர்ந்துவிட்டார்.*

❀

## *தொழிலாளியின் உள்ளத்தில் முதலாளி!*

***பி**.எஸ்.ஏ. அவர்கள் ஒருநாள் விமானத்தில் போய் கொண்டிருந்தபோது பக்கத்தில் இருந்த ஒருத்தரிடம் பேசினார்.*

*பக்கத்தில் இருந்தவர் தன்னைப் பற்றியும், தன் குடும்பத்தைப் பற்றியும், தான் செய்யும் வேலையைப் பற்றியும், தான் வேலை பார்க்கிற ஈ.டி.ஏ. கம்பெனி பற்றியும் சொல்லிக்கொண்டு வந்தார்.*

*பி.எஸ்.ஏ. அவர்களும் ஒன்றும் தெரியாத மாதிரி "உன் கம்பெனி எப்படி? உன் முதலாளி எப்படிப்பட்டவரு...?" என்று கேட்டார்.*

*அதற்கு அவர் "எங்க முதலாளி நல்லவரு! எங்க கம்பெனியில நல்ல சம்பளம் கொடுக்கறாங்க!" என்று சொன்னார்.*

*உடனே பி.எஸ்.ஏ. அவர்கள் "உன் முதலாளி அப்படி ஒண்ணும் நல்லவரு மாதிரி தெரியலையே..." என்று இழுத்தார்.*

*அந்த நிமிஷமே அந்த தொழிலாளி கோபத்துடன் "எங்க முதலாளியைப் பத்தி அப்படியெல்லாம் தப்பா பேசாதீங்க..." என்று சண்டைக்கு வந்து விட்டார்.*

❀

## *பேச்சு வெள்ளியென்றால்... மௌனம் தங்கம்!*

***பி**.எஸ்.ஏ. அவர்களும், அவரது சகோதரர் ஷுஐபு ஆலிம் அவர்களும் ஒருமுறை மலேசியாவில் மயில்வாகனசுந்தரம் என்ற பிரமுகருடன் ஒரு வியாபார விஷயமாக பேசிக் கொண்டிருந்தார்கள்.*

*அப்போது அவருக்கு தமிழில் மட்டும் அல்லாமல் ஆங்கிலத்திலும் விளக்கிக் கூறிக் கொண்டிருந்தார் ஷுஐபு ஆலிம் அவர்கள்.*

*கடைசியாக அந்த வியாபாரி ஷுஐபு ஆலிம் அவர்களிடம் சொன்னார் :*

*"உங்க ஆங்கிலத்தைவிட இலகுவாக, உங்க அண்ணன் கை சைகையாலேயே பேசி வியாபாரத்தை முடித்துவிட்டார்."*

❀



## சூதும் வாதும் வேண்டாம்

*பி.எஸ்.ஏ. அவர்களின் அலுவலகம் ஹாங்காங்கில் 1955லிருந்து இருக்கிறது.*

*பிரிட்டிஷ் அரசின் ஆளுகையின்கீழ் இருந்த அந்த சீனத்தீவு, எவ்வளவு தூரம் வியாபாரத்துக்கு முக்கிய கேந்திரமோ, அதே அளவு சீன மற்றும் மேற்கத்திய கலாச்சாரத்தின் தீய பொழுதுபோக்குகள் அனைத்துக்கும் பெயர் போனது.*

*ஹாங்காங்குக்கு அருகில் போர்ச்சுக்கீசிய அரசின் மக்காவ் தீவு உள்ளது. அதில் நிறைய சூதாட்ட கிளப்புகள் உள்ளன.*

*ஹாங்காங்கில் இருப்பவர்களும், அங்கு வருபவர்களும் அனேகம் பேர் விடுமுறை நாட்களில் அங்கு போய் சூதாடுவது உண்டு.*

*சிலர் நிஜமாகவும், சிலர் கேளிக்கைக்காகவும், சிலர் ஊர் சுற்றிப் பார்க்கவும் போவார்கள்.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் சுமார் 60 ஆண்டுகளாக ஹாங்காங் போகவர இருந்தும், பொழுதுபோக்குக்காகக்கூட எந்த கேளிக்கை விடுதிக்கும் போனதும் இல்லை. சூது விளையாடியதும் இல்லை. சாராயம், சிகரெட், பீடி, புகையிலை, பொடி போன்ற எதையும் தொட்டதும் இல்லை.*

❀

## நேர்த்தி

*பி.எஸ்.ஏ. அவர்கள் எந்த வேலை செய்தாலும், அதில் ஒழுங்கு இருக்க வேண்டும் என்று விரும்புவார்.*

*ஓர் அறையைக் கூட்டும் வேலையாய் இருந்தாலும், அதிலும் ஒரு நேர்த்தி இருக்க வேண்டும் என்று நினைப்பார்.*

*தான் ஈடுபட்ட எல்லா துறைகளிலும், செய்யும் வேலைகளில் தனித்தன்மையும், தரமும் இருக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருப்பார்.*

❀

## சகிப்புத்தன்மை

*பி.எஸ்.ஏ. அவர்களுக்கு 20 வயது இருக்கும். அப்போது ஷுஐபு ஆலிம் அவர்களையும் சேர்த்துக் கொண்டு முத்து, தங்கம், வைரம், நவமணிகள் போன்ற வியாபாரம் செய்து வந்தார்.*

*வெளியூர் வியாபாரி ஒருவருக்கு 2,000 ரூபாய் தர வேண்டி இருந்தது. அதைத் தருவதற்காக பணத்தோடு இருவரும் அங்கு சென்றார்கள்.*



*ஆனால், அந்த வியாபாரிக்கு வந்த தகவலின்படி, இவர்கள் 20,000 ரூபாய் தரவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்.*

*மறுத்துச் சொன்னதும், கோபம் வந்து பணத்தை இவர்களின் முகத்தில் தூக்கி எறிந்தார் அந்த வியாபாரி.*

*ஷுஐபு ஆலிம் அவர்களுக்கு கோபம் வந்துவிட்டது. பி.எஸ்.ஏ. அவர்களோ, ஷுஐபு ஆலிம் அவர்களை கையமர்த்தினார்.*

*அந்த வியாபாரி விசிறியடித்த பணத்தை இருவருமாக பொறுக்கி எடுத்துக்கொண்டு அலுவலகத்துக்கு வருகிறார்கள்.*

*இன்னும் 18,000 ரூபாய் பணத்தை சேர்த்துக்கொண்டு, அந்த வியாபாரியிடம் சென்று கொடுக்கிறார் பி.எஸ்.ஏ. அவர்கள்.*

*சில தினங்களில் அந்த வியாபாரிக்கு 'தனக்கு வரவேண்டிய பணம் 2,000 ரூபாய்தான்.' என்று தெரிய வருகிறது.*

*தன் தவறை உணர்ந்து, மன்னிப்பு கேட்டு, மீதி 18,000 ரூபாயை திருப்பிக் கொடுத்ததோடு இல்லாமல், எந்தவித கேரண்டியும் இன்றி, முன்பணம் ஏதும் கேட்காமல், பி.எஸ்.ஏ. அவர்களை நம்பி, பெரிய அளவில் கடனுக்கு பிஸ்னஸ் தருகிறார் அந்த வியாபாரி.*

## *பிறர் உணர்வுகளை மதிப்பவர்!*

***பி**.எஸ்.ஏ. அவர்களைப் பார்ப்பதற்காக 10ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது நாசர் ஷுஐபு வந்தார்.*

*அப்போது அங்கு அவரது சொந்தக்காரப் பையன் ஒருவனும் எதேச்சையாக வந்திருந்தான். கொஞ்சம் வசதி குறைந்த பையன் அவன்.*

*அவர்கள் இருவரையும் ஒன்றாகப் பார்த்த பி.எஸ்.ஏ. அவர்கள் "உங்க இரண்டு பேருக்கும், இரண்டு இரண்டு செட் பேண்ட் சர்ட் எடுத்து தர விரும்புகிறேன்." என்று சொன்னார்.*

*அப்போது நாசர் ஷுஐபு 'நானோ வசதியான தம்பி மகன். எனக்கெதற்கு உடுப்பு எடுத்துத் தரணும்? அதுவும் 2 செட்?' என்று நினைத்தார்.*

*இருந்தும் பேச்சை தட்டாமல், அந்த சொந்தக்கார பையனுடன் சென்று இருவருக்கும் 2 செட் பேண்ட் சர்ட் எடுத்துக் கொண்டார்.*

*விபரம் தெரிந்த வயதில் நாசர் ஷுஐபுக்கு புரிந்தது பெரிய வாப்பா பி.எஸ்.ஏ. அவர்களின் பெருந்தன்மை.*

*அதாவது அன்று வந்திருந்த சொந்தக்காரப் பையன் ஏழ்மை நிலையில் உள்ளவன். அவனது தன்மானம் பாதிக்காத வகையில் அவனுக்கு பெரிய வாப்பா உதவி செய்திருக்கிறார்!*



## படிக்காதவர்கள் பயன்பெற...

*பி.எஸ்.ஏ. அவர்கள் ஈ.டி.ஏ. அஸ்கான் பல்வேறு கிளைகளாக வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த அதன் ஆரம்பகாலக் கட்டங்களில் எம்.பி.எம். (மாடர்ன் பில்டிங் மெயிண்ட்டன்ஸ்) என்று ஒரு டிவிஷனை ஆரம்பித்திருந்தார்.*

*படிப்பறிவு இல்லாத தொழிலாளர்கள் பணியாற்றுவதற்காக அந்த டிவிஷன் தொடங்கப்பட்டது.*

*ஆனால் அதன் வளர்ச்சியும் வேகமும் குறிக்கத்தக்கதாய் அப்போது இல்லை.*

*இலாபம் இல்லாத ஒரு டிவிஷனாக அது இருந்தது.*

*"தொடர்ந்து அதை நடத்த வேண்டுமா...?" என்று மேலாளர்கள் பலரும் யோசித்துக் கொண்டிருந்தனர்.*

*அப்போது பி.எஸ்.ஏ. அவர்கள் உறுதியாக சொன்னார் :*

*"அதில் நஷ்டம்தான் வருகிறது. பரவாயில்லை... இலாபம் வந்தாலும் உழைப்புக்கு ஏற்றதாக இல்லை... தெரியும்! படிக்க இயலாமல் போய்விட்ட நம் ஏழைச் சகோதரர்கள் கஷ்டப்படக்கூடாது. அவர்களின் குடும்ப நலனிற்காக அதை தொடர்ந்து நடத்துங்கள்!"*

## ராணியானாலும் சிக்கனம்!

*பி.எஸ்.ஏ. அவர்களின் யூசுப் சுலைஹா ஹாஸ்பிடலுக்கு இராமநாதபுரம் ராணி வருவதற்கு சிறிது நேரத்திற்குமுன், அவருக்கு வைப்பதற்காக வி.என்.ஏ. ஜலால் அவர்கள் ஆப்பிளை எடுத்து துண்டுதுண்டாக நறுக்க முயற்சித்தார்.*

*அப்போது பி.எஸ்.ஏ. அவர்கள் "இப்போதே நறுக்க வேண்டாம். அவர்கள் வரத் தாமதமானால் பழம் கருத்துவிடும் என்பதுடன், அவர்கள் சாப்பிடவில்லை என்றால் வீணாகவும் போய்விடும். எனவே ஆப்பிளைத் தட்டில் வைத்து, அருகே ஒரு கத்தியையும் வைத்துவிடுங்கள். பழத்தை நறுக்க ராணி கத்தியை எடுத்தால் அப்போது நறுக்கிக் கொடுங்கள்." என்று சொன்னார்.*

## உபசரிப்பு!

*பி.எஸ்.ஏ. அவர்கள் தன்னிடம் வேலை செய்பவர்கள் மீது எப்போதும் மிகுந்த அக்கறை காட்டுவார்.*

*ஒருதடவை எம்.ஜி.ஆர். அவர்களின் துணைவியார் ஜானகி அம்மாள் உடல்நிலை சரியில்லாமல் இராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருந்தார்.*



*அவரை நலம் விசாரிப்பதற்காக பி.எஸ்.ஏ. அவர்கள் மருத்துவமனைக்குச் சென்றார்.*

*அவருடன் சென்னை அலுவலக மேலாளர் ஜே.எம். ஹஸன் அவர்களும் சென்றிருந்தார்.*

*ஹஸன் அவர்களும், டிரைவரும் வெளியே நின்றுவிட்டார்கள்.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் மட்டும் உள்ளே சென்றார்.*

*சிறிதுநேரம் கழித்து ஒருவர் சில பலகாரங்களையும், காபியையும் கொண்டுவந்து ஹஸன் அவர்களிடமும், டிரைவரிடமும் தந்து "உங்கள் ஐயா உங்களுக்கு கொடுக்கச் சொன்னார்." என்று சொல்லி கொடுத்துவிட்டுச் சென்றார்.*

## நகைச்சுவையும், நயம்சுவையும்

***பி**.எஸ்.ஏ. அவர்களின் நகைச்சுவையில் ஒரு நளினம், சிந்தனைத்தூண்டல், புத்திமதி போன்று ஏதாவது ஒரு 'டச்' இருக்கும்.*

*பி.எஸ்.ஏ. அவர்களின் தாயார் யூசுப் சுலைஹா அவர்களுக்கு 'தானும் சம்பாதிக்க வேண்டும்' என்று திடீரென்று ஓர் ஆசை வந்துவிட்டது அவர்களின் 65வது வயதில்.*

*வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, வீட்டில் கிடக்கும் பழைய பேப்பர்களை எல்லாம் சேகரித்து வரச் செய்தார்.*

*மகன் பி.எஸ்.ஏ.க்கு தெரியாமல் எடைபோட்டு விற்று வருமாறு டிரைவரை ஏற்பாடு செய்தார்.*

*'பேப்பருக்கு எவ்வளவு கிடைக்கும்?' 'பெட்ரோல் செலவுக்கு அது கட்டுபடியாகுமா?' என்றெல்லாம் சிந்திக்கவில்லை அந்த புது 'பிஸினஸ் உமன்'. (வெறும் 4, 5 ரூபாய்தான் கிடைத்தது.)*

*இதை எப்படியோ அறிந்து கொண்ட பி.எஸ்.ஏ. அவர்கள், தன் தாயிடம் வந்து "உம்மா! என் வியாபாரத்துக்குக் கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது. நீங்கள் பேப்பர் விற்ற காசில் கொஞ்சம் கடன் தாங்களேன்." என்றார் பணிவாக.*

## எளிமையின் உச்சம்

***பி**.எஸ்.ஏ. அவர்கள் 1981ல் சித்தார்கோட்டையில் எழுத்தாளர் ஹிமானா சையத் அவர்கள் கட்டிய இல்லத்துக்கு முன்அறிவிப்பின்றி வந்தார்கள்.*

*ஹிமானா சையத் அவர்களும், அவரது மனைவியும் பெருமகிழ்ச்சியோடு வரவேற்று உபசரித்து, டீயும் வீட்டில் இருந்த மேரி பிஸ்கட்டும் அளித்தார்கள்.*



*தட்டில் அவசரத்தில் 4, 5 பிஸ்கட்டுகளே வைக்கப்பட்டிருந்தன.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் ஹிமானாவைப் பார்த்து, "அம்மா! பிஸ்கட் ரொம்ப டேஸ்ட்டாயிருக்கு... எனக்கு இன்னும் கொஞ்சம் பிஸ்கட்டு வேணுமே!" என்று சொல்ல...*

*ஹிமானா ஓடிப்போய் கொண்டு வந்து கொடுத்தார்.*

*அது எளிமையா? அல்லது எவ்வளவு உபசரிப்பானாலும் உபசரிப்பவர்களை கண்ணியப்படுத்தும் உபயமா?*

*அதுதான் பி.எஸ்.ஏ. அவர்கள்.*

## அன்பான அறிவுரை!

***பி**.எஸ்.ஏ. அவர்கள், சித்தார்கோட்டையில் எழுத்தாளர் ஹிமானா சையத் அவர்கள் கட்டிய இல்லத்திற்கு வந்திருந்தபோது மஹ்ரிப் தொழுகை நேரம் வந்தது.*

*ஒளு (கை, கால் சுத்தம்) செய்ய பாத்ரூமுக்கு பி.எஸ்.ஏ. அவர்களை அழைத்துச் சென்றார் ஹிமானா சையத்.*

*ஒளு செய்து கொண்டிருக்கும்போது கதவைத் திறந்து பி.எஸ்.ஏ. அவர்கள் "தம்பி... கொஞ்சம் உள்ளே வாங்க.." என்றார்.*

*ஹிமானா சையத் சென்றார்.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் டேப்பில் தண்ணீரைத் திறந்து கால் கழுவிக் கொண்டே, "கை கால் கழுவிய தண்ணீர் மீண்டும் நம் காலுக்கு வருவதைவிட எதிர்ப்புறம் செல்லுமாறு வாட்டம் அமைக்க வேண்டும்." என்றார்.*

*எவ்வளவு சரியான, நுட்பமான, உரிமையுடன் கூடிய அறிவுரை!*

## இலவச சிகிச்சை

***பி**.எஸ்.ஏ. அவர்கள் வயதானபிறகு ஒருநாள் தூக்கம் வராமல் தவித்துக்கொண்டு இருந்தார்.*

*அதைப் பார்த்த பேத்தி நஹ்லா அவருக்கு சமோமைல் டீ போட்டுக் கொடுத்தார்.*

*அது அவருக்கு தூக்கம் வருவதற்குபதில் அடிக்கடி யூரினை வரவைத்துவிட்டது.*

*பாவம்... இரவு ஐந்து ஆறு தடவை எழுந்து எழுந்து பாத்ரூம் போய் கொண்டு இருந்தார்.*

*பேத்தியின் மனதுக்கு மிகுந்த கஷ்டமாகி விட்டது.*



*தாத்தாவுக்கு நல்லது பண்றோம் என்று நினைத்து கஷ்டப்படுத்தி விட்டோமோ என்று நினைத்து கவலைப்பட்டார்.*

*விடிகாலை பி.எஸ்.ஏ. அவர்கள்முன் நஹ்லா குற்ற உணர்ச்சியோடு போய் நின்று "ஸாரி முத்துவாப்பா! நேற்று நைட் நான் கொடுத்த டீயால அடிக்கடி பாத்ரூம் போகவச்சிட்டேனா...? ஐ ஆம் எக்ஸ்ட்ரீம்லி ஸாரி முத்துவாப்பா!" என்று ரொம்பவும் ஃபீல் பண்ணி சொன்னார்.*

*உடனே முத்துவாப்பா தன்னை திட்டுவார் என்றுதான் நஹ்லா நினைத்தார்.*

*அதற்கு பி.எஸ்.ஏ. அவர்கள் "நீ ஏன்டாம்மா ஸாரி சொல்லணும்... நான்தான் உனக்கு தேங்க்ஸ் சொல்லணும்... ரெண்டு நாளாய் நான் யூரின் சரியா போகாம கஷ்டப்பட்டுக்கிட்டு இருந்தேன். டாக்டர்கிட்டே போனா காசு செலவாகுமேன்னு போகாம இருந்தேன். நீ ஒரு டீயாலயே குணமாக்கிட்டியே! நேற்று நைட் முழுக்க நல்லா ப்ரியா யூரின் போச்சு தாயே! நான்தான் உனக்கு தேங்க்ஸ் சொல்லணும்." என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.*

❀

## குறையொன்றுமில்லை

***பி**.எஸ்.ஏ. அவர்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது ஒருநாள் தனது தங்கை மகன் ஹாலித் புஹாரியை தன் அருகே அழைத்து சொன்னார் :*

*"தம்பி! உங்க அம்மா, உங்களை என்னிடம் ஒப்படைத்துவிட்டு போய்விட்டாள். நானும் எனக்குத் தெரிந்தவரை உங்களை என் பிள்ளைகள்போல் பாவித்துதான் அன்பு செலுத்தி வளர்த்து வருகிறேன். எனக்குத் தெரியாமல் நான் எதுவும் உங்களுக்கு குறை வைத்திருந்தால் சொல்லுப்பா... அதனை நிவர்த்தி செய்கிறேன்... மறுமையில் சொர்க்கத்தில் என் தங்கை தாஸீம்பீவியை நான் சந்திக்கும்போது அவள் என்னை மகிழ்ச்சியாய் வரவேற்று, என்னிடம் பேச வேண்டும்."*

*பி.எஸ்.ஏ. அவர்கள் இப்படி சொன்னதும், "எங்களுக்கு எந்தக் குறையும் நீங்க வைக்கவில்லை மாமா! இளவரசர்களைப்போல் அல்லவா எங்களை வளர்த்தீர்கள் மாமா!" என்று சொல்லி கதறி அழுதுவிட்டார் ஹாலித் புஹாரி.*

❀

## *75* வயசு குழந்தை

***பி**.எஸ்.ஏ. அவர்களுக்கு 75 வயதானபோது எல்லோரும் சேர்ந்து பவளவிழா நடத்தினார்கள்.*

*விழாவில் பி.எஸ்.ஏ. அவர்கள் தான் ஹீரோ! வி.ஐ.பி.க்கள் எல்லோரும் வந்திருந்தார்கள்.*



*மேடையில் ஒவ்வொருவராய் வந்து பி.எஸ்.ஏ. அவர்களை பாராட்டி பேசினார்கள்.*

*நேரம் அதிகமாகிவிட்டது. கடைசியாக பி.எஸ்.ஏ. அவர்கள் பேசும் முறை வருகிறது.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் மேடைக்கு வந்தார்.*

*எல்லோரும் ஆவலாய் பார்க்கிறார்கள் என்ன பேசப் போகிறார் என்று.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் மைக்கை வாங்கியவுடன் பேசுகிறார்.*

*"ரொம்ப பசிக்குது... சாப்பிட ஏதாவது கொண்டு வாங்கப்பா!"*

## ***இறைவன் நம்மை பயன்படுத்துகிறான்!***

***பி****.எஸ்.ஏ. அவர்களிடம் ஒருவர் வந்து சொன்னார்.*

*"உங்க செல்வத்தை இப்படி நீங்க தானதர்மம்னு செலவு பண்ணாம வெச்சிருந்தீங்கன்னா நீங்கதான் உலகத்திலேயே டாப் ஒன் பணக்காரராய் இருப்பீங்க!"*

*அப்படி சொன்னவரிடம் பி.எஸ்.ஏ. அவர்கள் அமைதியாக பதில் சொன்னார்.*

*"நாம ஏதாவது ஒரு கஷ்டத்தில இருக்கறப்ப இறைவன் வந்து உதவ மாட்டானான்னு நெனப்போம். அதேமாதிரி கஷ்டப்படற ஒருத்தருக்கு நாம உதவறதுக்கு இறைவன் நம்ம மூலமாய் அவங்களுக்கு உதவச் செய்து அவங்க கஷ்டத்தைப் போக்குறான்."*

## ***வாக்குமூலம்***

***பி****.எஸ்.ஏ. அவர்கள், தனது தங்கை மகன் ஹாலித் புஹாரியிடம் அடிக்கடி சொல்வார் :*

*"இறைவன் கொடுத்த மனிதப்பிறவி இந்த பூமியில் ஒருமுறைதான்! இங்கே நாமும் நல்லா இருக்க வேண்டும். நம்மால் முடிந்த உதவிகளை மற்றவர்களுக்கும் செய்ய வேண்டும். வாழும் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்கணும். காசு மட்டும் வாழ்க்கை இல்லை. குடும்பத்தவர்களோட அன்பாய் இருக்கணும். இந்த பூமியில் நாம் பிரதிபலன் பார்க்காமல் செய்யும் நன்மைகளுக்கு மறுமையில் இறைவன் கூலி கொடுப்பான்."*

## ***பிரார்த்தனை***

***பி****.எஸ்.ஏ. அவர்கள் ஒரு தடவை உம்ராவுக்கு (மெக்கா, மதினாவுக்கு புனிதப்பயணம்) தனது தங்கை மகள்கள் ஜீனத், ஜரினா மற்றும் தனது மகள் மரியம் ஆகியோருடன் சென்றார்.*



*ஜீனத், பி.எஸ்.ஏ. அவர்களிடம் "நீங்க என்ன மாமா துவா (பிரார்த்தனை) கேட்டீங்க...?" என்று கேட்டார்.*

*அதற்கு பி.எஸ்.ஏ. அவர்கள் "எனக்குப் பின்னாடியும் நான் செஞ்சுக்கிட்டு வர்ற தர்ம காரியங்கள் நல்லபடியா தொடரணும்னு துவா கேட்டேன்மா." என்று சொன்னார்.*

❀

## பேச்சைவிட மௌனம் அழகானது!

***பி**.எஸ்.ஏ. அவர்கள் பேசுவதை குறைத்திருந்த நேரம்.*

*ஒருநாள் அவரது பேத்தி மீரா சுலைஹா அவரிடம் போய் "ஏன் முத்துவாப்பா இப்படி அமைதியாவே இருக்கீங்க...?" என்று கேட்டார்.*

*மீரா சுலைஹாவைப் பார்த்தார். மறுபடியும் அமைதியாய் இருந்தார்.*

*உடனே மீரா சுலைஹா, அவரின் முகத்தை குழந்தையை பிடிக்கறமாதிரி பிடித்து "முத்துவாப்பா! நான் உங்ககிட்டதான் சொல்றேன். ஏதாச்சும் பேசுங்க.. முத்துவாப்பா! ஏதாச்சும் பேசுங்க!" என்று சொன்னார்.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் நிமிர்ந்து பார்த்தார்.*

*"ப்ளீஸ்... எனக்காக கொஞ்சூண்டு பேசுங்க... முத்துவாப்பா!" என்று மீரா சுலைஹா கெஞ்சினார்.*

*பி.எஸ்.ஏ. அவர்கள் மெல்ல வாய் திறந்து "நான் பேச வேண்டியதை எல்லாம் பேசிட்டேம்மா... வேற சொல்றதுக்கு ஒண்ணுமில்ல..." என்று சொல்லிவிட்டு மறுபடியும் மௌனமாகி விட்டார்.*

❀

## அன்புக்கு அடிமை

***பி**.எஸ்.ஏ. அவர்கள் முதுமையில் நடக்க முடியாமல் படுத்த படுக்கையாய் இருந்தபோது பேரன்பேத்திகள் தன்னைப் பார்க்க வரும்போது அவர்களது கைகளை இறுக்கிப் பிடித்துக் கொள்வார்.*

*"போறேன்" என்று அவர்கள் சொன்னால் கையை விடமாட்டார்.*

*"போயிட்டு மறுபடியும் வந்து உங்களைப் பார்க்கறேன் நம்மவாப்பா!" என்று சொன்னால்தான் கையை விடுவார்.*

❀

## இந்த உலகம் மாயை...

***பி**.எஸ்.ஏ. அவர்கள் முதுமையின் உச்சத்தை தொட்டபோது அவரது பேச்சு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வந்தது.*



*அப்போது ‘மதினாவுக்கு போகணும்... மதினாவுக்கு போகணும்...’ என்று சொல்லிக்கொண்டே இருந்தார்.*

*அவரது பிள்ளைகள் அவரை மதினாவுக்கு அழைத்துச் சென்றார்கள்.*

*அந்தசமயம் ஒருநாள் தன்னோட ஷூவை, தானே போடுவதற்கு சிரமப்பட்டார்.*

*“ஏன் கஷ்டப்படறீங்க மாமா...? நான் போட்டுவிடறேன்.” என்று சொல்லியபடி அவரது மூத்த மருமகள் நிலோபர் அவருக்கு உதவி செய்யப் போனார்.*

*அதற்கு பி.எஸ்.ஏ. அவர்கள் “வேண்டாம்... இன்னும் கொஞ்சநாள்தானே இருக்கப்போறேன்... நானே போட்டுக்கறேன்...” என்று சொன்னார்.*

*“ஏன் மாமா இப்படி எல்லாம் பேசறீங்க...?” என்று அழுதுவிட்டார் நிலோபர்.*

*“இந்த உலகம் நமக்கு நிரந்தரம் இல்லம்மா... இது தங்கற விடுதி மாதிரிதான். மறுமைதான் நிரந்தரமானது!” என்று ஒவ்வொரு வார்த்தையாய் உச்சரித்தார் பி.எஸ்.ஏ. அவர்கள்.*

## ***தளர்ந்த உடம்பிலும்... தளராத பாசம்!***

***பி.*** *எஸ்.ஏ. அவர்களால் நடக்க முடியாமல் போனபோதுகூட அவர் சோர்ந்துபோய் உட்கார்ந்துவிடவில்லை.*

*வீல்சேரில் உட்கார்ந்துகொண்டே, காரில் போய் ஆபீஸ் வேலைகளை பார்த்தார். பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.*

*ரொம்பவும் முடியாமல் போய் வீட்டில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தபோது, வீல்சேரை வீட்டு வாசலில் போட்டுக்கொண்டு உலகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தார்.*

*ஒருகாலக்கட்டத்தில் சுத்தமாக அவர் பேச்சு நின்று, வீட்டில் கட்டிலில் பி.எஸ்.ஏ. அவர்கள் படுத்துக்கொண்டு இருந்தபோது, பேரப்பிள்ளைகள் அவரை பார்க்க வந்து விளையாடிக் கொண்டிருப்பார்கள்.*

*அப்போது பி.எஸ்.ஏ.அவர்களால் எழுந்து பிள்ளைகளை கொஞ்ச முடியவில்லை என்றாலும், கண்பார்வை பேரப்பிள்ளைகள் எங்கெல்லாம் ஓடி ஆடி விளையாடுகிறார்களோ அங்கெல்லாம் போய் கொண்டே இருக்கும்.*





## பிடித்த இடம்!

***பி***.எஸ்.ஏ. அவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டு விமானத்தில் இருந்து திரும்பி வந்தவுடன் வீட்டிற்குக்கூட முதலில் செல்ல மாட்டார்.

முதலில் வந்து வண்டலூர் கல்வி நிறுவனங்களை பார்ப்பதில்தான் அதிகம் மகிழ்ச்சி அடைவார்.

தன் மனைவி முத்து சுலைஹா இறந்தபோது வீட்டில் எவ்வளவோ இடம் இருந்தும், தான் உயிருக்குயிராய் நேசித்த கிரசெண்ட் பள்ளி வளாகத்திலேதான் மனைவியை அடக்கம் செய்தார்.

அந்த அளவுக்கு கிரசெண்ட் பள்ளியை மனதார நேசித்தார் பி.எஸ்.ஏ. அவர்கள்.

தான் இறந்த பிறகும் தன்னையும் கிரசெண்ட் பள்ளி வளாகத்தில் தன் மனைவியை அடக்கம் செய்த இடத்திற்கு அருகிலேயே அடக்கம் செய்ய வேண்டும் என்று விரும்பினார்.

அவர் விருப்பப்படியே அவருக்கு விருப்பமான கிரசெண்ட் பள்ளியில், தான் மிகவும் விரும்பிய தனது மனைவி முத்து சுலைஹா அவர்களுக்கு அருகிலேயே அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

வாழும் காலம் முழுக்க ஓய்வே இல்லாமல் கிரசெண்ட் பள்ளி வளர்ச்சிக்காகவே உழைத்த பி.எஸ்.ஏ. அவர்கள், இப்போது அங்கேயே ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார்!